ஞானஸ்நானங்கள்

Rev. V. DAVID, M.A., B.D., M.Th.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஞானஸ்னானங்கள்

Rev. V. DAVID, M.A., B.D., M.Th.

1999

C. S. I. PRINTING PRESS,
MARTANDAM

Baptisms

First Publication 1999
by
Rev. V. David
Tel. 0091-4651-73255

தொடர்பு முகவரி :

Mr. P. V. RETNAM (Rtd. Headmaster)
நல்லாசிரியர்
ANPAGAM
PULIYIRANGHI
THIRUVATTAR - 629 177
Tel. 0091-4651-78279
0091-4651-77431
0091-4651-73255

அர்ப்பணம் :

C. S. I. தமிழ் திருச்சபை-அபிதாபி-க்கு
(UAE, P.O. Box 32279) இந்நூலை அர்ப்பணிக்கிறேன்.

Rev. V. டேவிட்
முதல் முழுநேர Additional Vicar.
07-01-1999.

விலை ரூ. **10**/-

This Book is Sponsored
By

1. **Mr. V. VIJAYAKUMAR**
(The Representative to Dubai congregations)

Wife : **Mrs. Helan Vijayakumar**

Son : **Mr. Arul**

Daughter : **Miss Anipa**

Tel. 00971-2-764383

2. **Mr. G. RAJA KUMAR**
(The Former Representative to Dubai Congregations)

Wife : **Mrs. Jancy**

Daughter : **Miss Rishanti**

Son : **Mr. Jeremi**

Tel. 00971-2-349219

இந்நூலின் ஆசிரியர்...

ஆயர்கள் என்பவர்கள் தூய ஆவியானவரின் வல்லமையால் கடவுளின் வார்த்தைகளை திருச்சபை மக்களுக்கு ஊட்டி வளர்ப்பதற்காக அழைக்கப் பட்டவர்கள். இன்றைய நாகரீக உலகில் வாழும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவ வார்த்தையால் ஆத்மீக ஊட்டம் பெறுதல் வேண்டும். சபை மக்களை ஊட்டி வளர்த்து கிறிஸ்தவ உபதேசங்களை மென்மேலும் அறிவித்திட திருமறை விளக்க நூல்கள் இன்றியமை யாதவை

'ஞானஸ்னானங்கள்' எனும் தலைப்புக்கொண்ட இந்நூலின் ஆசிரியர் அருள்திரு. வி. டேவிட் 'திருவருட் சாதனங்கள்' என்ற சொல்லின் பொருளை ஞானஸ்னானம் மற்றும் ஆண்டவர் இயேசுவின் அழைப்பு என்பது சார்ந்து நன்கு விளக்கியுள்ளார். ஞானஸ்னானம் என்ற திருவருட் சாதனத்தின் உண்மைப் பொருள் குறித்து விவிலியம் குறிப்பிடுவதைத் துல்லியமாக எடுத்துக் காட்டுகிறார்.

இந்நூலாசிரியர் அருள்திரு. டேவிட் குமரித் திருமண்டிலம், தென்னிந்தியத் திருச்சபையின் புகழ்மிக்க அருளுரைஞர். அனுபவம் மிக்க ஆயர். அன்னார் தற்பொழுது ஐக்கிய அரபு எமிரேட் அபுதாபியை மையமாகக்கொண்ட துபாயில் தென்னிந்தியத் தமிழ்த் திருச்சபைகளின் கூடுதல் ஆயராகப் பணியாற்றி வருகின்றார்.

அருள்திரு. W. சாமுவேல்,
M.A.B.D., Dip.C.O., Dip.I.M. (UK)
தலைமை ஆயர்
C. S. I. தமிழ்த் திருச்சபை, U.A.E.

Church of South India -
Kanyakumari Diocese

Phone : Diocesan Office : 31539
Bishop's House : 33610

C. S. I. Diocesan Office
71-A, Dennis Street
Nagercoil - 629 001
South India

Rt. Rev. M. I. KESARI, M.A., B.D., S.T.M.
BISHOP

அணிந்துரை

புனித திருமறையின் கருத்துக்களை விளக்க அல்லது புரிந்து கொள்ள உதவும் நோக்குடன் எழுதப்பட்ட நூல்கள் ஏராளம். அவ்வரிசையில் Rev. V. டேவிட், M.A., B.D., M.Th., ஐயர் எழுதிய இந்நூல் ஒரு தனிச் சிறப்புடையது ஆகும். சாக்கிரமந்துகள் பற்றி திருமறை ஆதாரங்களுடன் விளக்கும் ஆசிரியர், நமது வாழ்க்கைச் சூழலுக்கு பொருந்துகின்ற வகையில் புரிந்து கொள்ளும் அளவில் ஆய்வு முறையை கையாள்வது பாராட்டிற் குரியது. முக்கியமாக ஞானஸ்னானம் பற்றி விரிவாக பல வினாக்களை எழுப்பி இன்று நிலவி வரும் சந்தேகங் களுக்கு திருமறை ஆதாரங்களுடன் விடை தருவது இந்நூலின் சிறப்பு ஆகும்.

இந்நூலை அனைவரும் வாங்கிப் படிப்பது கிறிஸ்தவ நம்பிக்கைக்கு வலுவூட்டுவதாக அமையும். இச்சிறப்பிற் குரிய இந்நூலாசிரியர் Rev. V. டேவிட் அவர்களை பாராட்டுகின்றேன்.

இறையாசி உங்களுடனிருப்பதாக.

இவண்,

பேராயர்

Rev. G. Devakadasham, M.A., B.D., M.Th.
PAD. Director, Synod, Madras

It gives me great joy that Rev. V. David has been appointed as the pastor for the Tamil congregation in Abu Dhabi. I pray for all the ministries he initiates among the faithful there. In particular I appreciate his wish to write a book on BAPTISM.

Baptism is one of the two sacraments. We accepted and practice. Baptism is Biblical and Mystical. It is not a ritual, but an experience. There is no point in arguing about Validity of infant baptism or the mode of baptism The church is called to teach to the believing community the truth of baptism. The ministers of Gods word should first equip themselves about this important teaching and then instruct people.

I am sure that the book Rev. V. David brings out on baptism will clear the misconceptions the simple belivers have about it.

God bless you!

Yours Sincerely,
Sd/-
Rev. G. Devakadasham

Dr. D. Mathias, M.A., M.Phil., B.D., Ph.D.
Nagercoil - Tel. 31432

Men make Theology, but men of God make Theology an inspiration and a guiding light for people of all faith. The church has been God's instrument to manifest His grace and concern among peoples of all nations. To many Christians including even some Pastors who have been through Theological Courses-critical study of the Bible seems remote and negative and unrelated to making the Bible meaningful for life today. Yet there are some Pastors who have clear vision and courage for making the Biblical thoughts more practical and applicable to us. Rev. V. David is such a Pastor and this study of the "Sacrament of Baptism" is a splendid example. He first started his Biblical expositions on 'Baptism' in the Ecumenical Christian Journal 'VINNARASU' in 1980's and they were well accepted by many. He disclosed number of issues on the long debated questions of 'Baptism' including Infant Baptism, Adult Baptism, Spirinkling immerse Baptism etc. which enlarged the theological understanding of Tamil Christian readers.

This small booklet, Rev. V. David has brought out is based on his careful study of documents, commentaries and practical wisdom. Some of the thoughts, he himself has prepared for sermons on

the pulfit and for Bible studies in the youth groups. Besides providing Biblical reflections, this book is lucid, readable and holds the interest of Tamil congrecations. I am sure the book will be found stimulating to every Tamil Christian in India and abroad as it provides fundamental principles and insights on Baptism. I am sure that the chapters included in this attempt will pave the way to the students of Theology to make indepth study on the subject further more.

Yours Sincerely
Sd/-
Dr. D. Mathias

உள்ளடக்கம்

I ஞானஸ்நானங்கள் 1

1 முகவுரை 1

2 ஞானஸ்நானமும் விருத்தசேதனமும் 2

II ஐந்துவித ஞானஸ்நானங்கள் 5

1 யூத ஞானஸ்நானம் 6

2 புறஜாதியார் ஞானஸ்நானம் 8

3 யோவான் ஸ்நாபகன் ஞானஸ்நானம் 9

4 இயேசுவின் ஞானஸ்நானம் 13

(a) உலகப் பொறுப்புகளிலிருந்து ஓய்வு 16

(b) எதிர்ப்புகளை சந்திப்பு 17

(c) யோர்தான் 18

(d) தேவநீதி 19

(e) கள்ளப்போதகம் 20

5 கிறிஸ்தவ ஞானஸ்நானம் 23

(a) குழந்தை ஞானஸ்நானம் 24

(b) குழந்தையும் விசுவாசமும் 25

(c) குழந்தையும் அறிவும் 25

(d) குழந்தையும் வாக்குத்தத்தமும் 27

(e) குழந்தையும் ஜன்ம பாவமும் 28

(f) குழந்தையைத் தடைசெய்கிறவனுக்கு தண்டனை 30

(g) ஆத்மீக ஆகாரம் 31

(h) குழந்தை ஞானஸ்நானம்- வரலாற்றுப் பார்வை 32

(i) விசுவாசித்து ஞானஸ்நானம் எப்பொழுது வந்தது 34

(j) அன பாப்டிஸ்டு 34
(k) ஒரு கேள்வி 36
(l) விசுவாசக் குடும்பம் 37
(m) பெற்றோர் விசுவாசம் பிள்ளைகளுக்குப் போதும் 38
(n) மறு ஞானஸ்னானமும்-விசுவாசக்குறைவும் 40
(o) மரித்தவர்களுக்கான ஞானஸ்னானம் 41
(p) தண்ணீரில்லா ஞானஸ்னானம் 41
III முறைகளும் பிரச்சனைகளும் 43
1 தெளித்தலுக்கு சான்று 44
2 அபிஷேகம் 45
3 திருவசன முழுக்கு 46
4 இயேசுவின் அடக்கம் 47
5 கரையேறினார் 48
6 சிலுவையை மறைக்கும் பரிதாபம் 49
7 3000 பேர் ஞானஸ்னானம் 51
8 விசுவாசத்தின் ஆழம் 52
9 ஜலத்தினாலும் ஆவியினாலும் 53
IV முடிவுரை 54
துணை நின்ற நூல்கள் 58
வரவேற்புப் பா 59

என்னுரை

கிறிஸ்து இயேசு உலகிற்கு மாதிரி. அவர் நாமத்தை சொல்லும் நாம் பல யாதிரிகள். இயேசுவின் ஊழிய காலத்திலும் தான் கடந்து செல்லும் போதும் பல கட்டளைகளை தந்துள்ளார். அவைகளில்

(i) அன்பு :

ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள் (யோ 13:34,35). இந்த அன்பு கற்பனைகளின் சுருக்கம் (1தீமோ. 1 : 5). மனிதரில் அன்புகூருவது கடவுளில் அன்பு கூருவதற்கு சமம் (மத். 24:37-39). இது ஒரு ராஜரீகப் பிரமாணம் (யாக். 2:8). ஆனால் இன்று மக்களுக்கும், கடவுளுக்கும் முக்கியத்துவம் கொடுக்காதபடி சில சித்தாந்தங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதினால் ராஜரீக கற்பனை (அன்பு) வறண்டு பிரிவினை வளர்கிறது. பண்டிதர் ஒருவர் சொல்லுகிறார் :

Lord, we love your commandment more than the people
We love our brand of Mission more than the people
We love our doctrines more than the people
We love our Churches more than the people
We love our people more than other people

(ii) திருவிருந்து :

தன் ஊழியத்தில் ஸ்தாபித்த (He instituted) திருவிருந்து (மத். 26 : 28) என்னும் கட்டளை. பவுல் இதனை கூறும்போது கடவுளின் பாடு, மரணம், உயிர்த்தெழுதலை நினைவு கூருவதும் (I கொரி. 11:24), கர்த்தர் வருமளவும் செய்யவும் (11 : 26) என்று முக்கியத்துவப் படுத்துகிறார். இதனை Anun என்ற பக்தர் ;

Without the bread and the sacred cup
I might forget the price
That You, Lord paid so willingly
the atmost sacrifice - என கூறுகிறார்.

ஊழியத்தின் முன்னோடியும், முதுகெலும்புமாகிய பவுல் முக்கியப்படுத்தும் திருவிருந்துக்கு முக்கியத்துவம் கொடுக்காது, அவர் முக்கியப்படுத்தாத ஞானஸ்னானத்தை (I கொரி. 1: 15-17) முக்கியத்துவப் படுத்துவது சுய ஆதாயத்திற்கே. கிறிஸ்தவ பக்தி வளர்ச்சிக்கு ஞானஸ்னானம், திருவிருந்து மிக அவசியம்.

இன்று பல இலட்சம் ஊழியர்கள், ஊழியக் களங்கள், ஊழியத்திற்கென்று கோடா கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டும் அதன் வளர்ச்சி சுமார் 3% ஐத்தான் எட்டியுள்ளது என்றால் நம்முடைய ஒற்றுமையின்மையே இதற்கு காரணம். ஒரு கிறிஸ்தவன் ஓர் ஆண்டில் ஒருவரை கிறிஸ்துவுக்குள் கொண்டுவந்தால் இன்று 22% ஐ தாண்டலாம். இது உண்மை. ஏன் வளரவில்லை தெரியுமா, நாம் ஊழியம் (Mission) என்ற போர்வையில், ஆத்தும ஆதாயம் (Soul winning) என்று சொல்லி பிடித்து வைத்த மீன்களை (கிறிஸ்தவர்களை) திருடி இன்னொரு கூடையில் (சபை) போடுகிறோம்.

இதனை தாமஸ் என்ற இறைபக்தர் 'Sheep Steeling' என்கிறார். தொடர்ந்து அவர்

'Is a Missionary a business salesman?
Is not Christ present in all Churches?
Is any Church on earth perfect?'

என்கிறார். ஆகவே நமது சிந்தனைகளை மறு ஆய்வு செய்வோம்.

(iii) ஞானஸ்னானம் :

இயேசு சொன்ன (spoken) கட்டளை (மத். 28 : 19). இதில்தான் இன்று பிரிவினை, இதன் பொருளுக்கு (Bapitsmal life) முக்கியத்துவம் கொடுக்காதபடி முறைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதினால் இன்று பிரிவினைகள். மேலும் முழுகி ஞானஸ்னானம் என அழுத்திச் சொல்லும் சபைகள் ஒன்றாய் இருக்கின்றனவா? அதுவும் இல்லை. எத்தனை எத்தனை பிரிவுகள்.

மேலும் திருமறை மூக்கியத்துவப்படுத்தும் திருவிருந்தில் பெண்கள் இடம் பெறவில்லை; ஆகவே அவர்களை திருமறை சேர்க்க கூறவில்லை என கூறி வெளியே விடாததற்கு கடவுளுக்கு ஸ்தோத்திரம்.

இன்று நாம் ஆண்டவரைவிட ஆசாரத்திற்கும், வாழ்க்கையை விட வார்த்தைக்கும், சாப்பாட்டைவிட சம்பர்தாயத்திற்கும் முக்கியத்துவம் கொடுப்பது தவறு.

200 ஆண்டுகளுக்குமுன் திருத்தூதுவர்கள் இந்தியா வந்து, சமுதாய, பாரம்பிரிய மற்றும் பொருளாதார கட்டுகளினின்று விடுதலை வாங்கித்தந்து நம்மை மனிதர்களாக்கினார்கள். இவர்கள் போதித்ததைவிட, அவர்கள் வழியாக உருவாகிய திரிபுக்கொள்கை கூட்டத்தார் போதிப்பதுதான் உண்மையா? அந்த திருத்தூதுவர்கள் இம்மண்ணில் புதைக்கப்பட்டதினால் (விதைக்கப்பட்டதினால்) நீங்களும் நானும் முளைத்து, செடியாகி கனிகொடுக்கிறோம். மறவாதீர். அன்று சீர்திருத்த சபைகள் கல்வி, மருத்துவம் இவைகளை உருவாக்கினதினால் இன்று நாம் கனி கொடுக்கிறோம். மற்ற ஐக்கியங்கள் சமூக முழுவளர்ச்சியை நோக்காது தாங்களே வளர்ந்தார்கள் என்பது வரலாறுதரும் உண்மை.

ஞானஸ்னானத்தைக் குறித்த இன்னும் ஒரு உண்மையைக் கூட சொல்ல விரும்புகிறேன். நம் பெற்றோரால், 'அன்னை தந்தை உந்தன் சந்நதி முன் நின்று சொன்ன வாக்கு' என்ன ஆனது? நம் பெற்றோர் நம்மை பிரதிஷ்டை செய்ததை மறவாதே. இப்படி மிஷனறிகள் நமக்கு செய்ததையும், பெற்றோர் அர்ப்பணத்தையும் மறப்பதும் ஏணியினூடே ஏறி பின் ஏணியை மிதித்துத்தள்ளுவது என அஞ்சுகிறேன்.

என் அன்புக்குரியவர்களே ஒருவிசை உங்களை நடு நிலைப்படுத்தி, இந்நூலை (முதலிலுல் முடிவுரையையும்) படியுங்கள். நான் புரிந்து கொண்டது போதும் என்று நிறைவு பெற்றவர்களுக்கு இந்நூல் பயன் தராது.

ஜெபம்:

இறைவா வாதங்களைவிட்டு பாதைகளை படைக்கவும், பேதங்களை மறந்து உறவுகளை வளர்க்கவும் தூய ஆவியர் துணை நின்று புரிந்து கொள்ளும் ஆவியை தரவேண்டும் என வேண்டுகிறேன். அமென்.

நன்றி:

1 அணிந்துரை எழுதிய எனது அன்புக்குரிய பேராயர் Rt. Rev. M. I. KESARI, M.A., B.D., S.T.M. அவர்களுக்கும், Rev. DEVAKADASHAM, M.A., B.D., M.Th., PAD Director அவர்களுக்கும், Dr.D. மத்தியாஸ், M.A., M.Phil, B.D., Ph.D. அவர்களுக்கும் எனது நன்றிகளை கோடிட்டுக் காட்டுகிறேன்.

2 இந்நூலை வெளியிட நிதியுதவி செய்த திரு. V.விஜயகுமார் குடும்பத்திற்கும், திரு.G. இராஜகுமார் குடும்பத்திற்கும் நன்றி சொல்லுகிறேன்.

3 துபாய் சபைப் போதகர் Rev. W. சாமுவேல், M.A., B.D. அவர்களுக்கும், துபாய் சபைச்செயலர் திரு. துரைராஜ் அவர்களுக்கும், துபாய் நிருவாகக்குழு அங்கத்தினர் களுக்கும் எனது நன்றி.

4 நானும் எனது வாழ்க்கைத்துணைவியும் அபுதாயில் தங்கும்போது எனது பிள்ளைகளை பராமரித்துவரும் எனது அத்தான் Mr. P. V. ரெத்தினம் (நல்லாசிரியர்) அவர்கள் குடும்பத்தினருக்கும் எனது நன்றி.

5 குறித்த காலத்தில் இப்புத்தகம் அச்சிட்டு உதவிய கன்னியாகுமரி மறை மாவட்ட மார்த்தாண்டம் சி. எஸ். ஐ. அச்சகத்தாருக்கும் எனது நன்றி.

Rev. V. DAVID
Addl. Vicar

7-1-1999

ஞானஸ்னானங்கள்

முகவுரை :

திருமறை எக்காலத்திற்கும், எல்லா வற்றிற்கும் பதில் தரும் கடவுளால் அருளப்பட்ட வெளிப்பாடு. திருமறையின் ஒரு கருத்தினை அறிய வேண்டுமானால் அது தோன்றிய வரலாறு, பின்னணி, பகுத்தறிவு பரிணாம வளர்ச்சி, சூழ்நிலை முதலியவற்றை அறிந்திருத்தல் வேண்டும். சான்றாக, லேவியராகமத்தில், பலியைக் கேட்ட, மற்றும் பெத்தேலில் தொழ அழைத்த ஆண்டவர், கி.மு. 7-ம் நூற்றாண்டு இறைவாக்கினர் ஆமோஸ் வழியாக பலி வேண்டாம் (ஆமோ. 5:22) கில்கால், பெத்தேலில் தேடாதீர்கள் (5:5) என்றும் கூறுகிறார். இது கடவுளின் கருத்தில் மாற்றமல்ல, மாறாக கருத்தில் அடைந்த வளர்ச்சி.

ஞானஸ்னானம் ஆதித்திருச்சபையின் காலத் திலிருந்தே பின்பற்றப்பட்ட புனித சடங்கு. கடவுளின் கட்டளை. ஆத்மீக வளர்ச்சிக்கு அவசியம். இப்புனித சடங்குகள் கடவுளில் வளரத்தூண்டும் படிகள். படிகளே போதும் என்பது தவறு. சாக்கிரமெந்துகள் கூறும் பொருள்தான் முக்கியமே தவிர ஜடப் பொருளோ, சடங்குகளோ, அநுசரிக்கும் முறை களோ முக்கியமல்ல. Baptism is an outward and visible sign of an inward and spiritual Grace என புனித அகஸ்டின் சொல்கிறார்.

ஞானஸ்னானம் திடீர் என்று தோன்றியது அல்ல. இது அன்னிய மதங்களிலும் காணப்பட்டது. ஐசிஸ், மித்ரா போன்ற வேறு மதவழிபாட்டை சார்ந்தவர்களும் ஞானஸ்னானம் என்ற புனித சடங்கை அனுசரித்து வந்தனர். இது சுத்திகரிப்புக்காக பின்பற்றப்பட்ட ஒரு நிகழ்வு.

ஞானஸ்னானமும் - விருத்தசேதனமும் :

பழைய ஏற்பாட்டில் ஒருவன் யூதனாகவேண்டும் என்றால் அவனுக்குச் செய்யப்படும் சடங்கு-விருத்த சேதனம். இது ஆபிரகாம் முதல் காணப்பட்ட ஒரு அர்த்தமுள்ள செயல். விருத்தசேதனம் செய்யப் பட்டவன் தான் யூதன். கடவுள் ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்து (ஆதி. 17:9-21) விசுவாசத் திற்கு அடையாளமாக(ரோ. 4:11) கொடுக்கப்பட்டது. விசுவாசத்திற்கு அடையாளமாகவும், அதன் நீதிக் காகவும் கொடுக்கப்பட்டது. பின் இந்த விசுவாசிக்கு பிறந்த பிள்ளைகளுக்கும் விசுவாசத்திற்கு அடையாளமாக (ஆதி. 17 : 10) கொடுக்கப்பட்டது. ஈசாக்குக்கு எட்டாம் நாளில் செய்யப்பட்டது. ஆபிரகாம். பிள்ளைக்கு விசுவாசமில்லையே என கேள்வி கேட்கவில்லை.

இதன் தொடர்ச்சிதான் ஞானஸ்னானம். Baptise was the Christian equivalent of the Jewish ceremony of circumcision ... (Church History 3, New movements. 1976 P. 38) கிறிஸ்து சபையில் விருத்த சேதனத்திற்கு பதிலாக கையினால் செய்யப்படாத விருத்தசேதனமாக

(கொலோ. 2: 11) ஞானஸ்னானம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இந்த மாமிசச் சடங்கு காலப்போக்கில் பொருள் சிதையத் தொடங்கியது. ஆகவே விருத்தசேதனம் செய்யுங்கள் என்று கூறிய ஆண்டவர் விருத்தசேதனம் உள்ளவரையும் இல்லாதோரையும் அழிப்பேன் என்கிறார் (எரே. 9 : 25, 26). இதன் வளர்ச்சிப் படியாக மாமிச சடங்கை மாற்றி, செவிகள், (எரே. 6 : 10), உதடுகள் (யாத். 6:12) இதயத்தில் (உபா 30 : 6) விருத்தசேதனம் செய்யவேண்டும் என்றும் சொல்கிறார். ஆக ஆவிக்குரிய வளர்ச்சி பெறுகிறது. பவுல் இந்த உடன்படிக்கை (அப். 7 : 8) பிரயோஜனமுள்ளதுதான் (ரோ. 2 : 25); ஆனால் கடவுளின் அன்பு என்னும் பிரமாணத்தை மீறினால் சடங்குகளினால் பிரயோஜனமில்லை என்கிறார்.

கி.மு.169-ல் விருத்தசேதனத்தின் அடிப்படையில் பெரும் பகை வளர்ந்தது. அந்தியோக் அரசன் எருசலேமைவென்று விருத்தசேதனமுள்ளோரை கொன்றான். விருத்தசேதனம் உள்ளவர்கள், இல்லாதவர்கள் என்ற பாகுபாடு வளர்ந்தது. இது இயேசுவிற்கு பின், புதிய ஏற்பாட்டு திருச்சபையிலும் புகுந்து பிரச்சினையாயிற்று. இச்சம்பவம் கி.பி. 49-ல் நடந்த "எருசலம் கவுன்சிலில்" வந்தது. (அப்.15-ம் அதிகாரம் அந்த கவுன்சில்) இதில் விசேசம் என்ன வென்றால் சில கிறிஸ்தவர்கள் யூதேயாவிலிருந்து வந்து இரட்சிக்கப்பட்ட மக்களிடம் நீங்கள் மோசேயின் முறைமைப்படியே விருத்தசேதனம் பெறாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள் (15 : 1)

என்று போதகம் பண்ணினார்கள். (எதுபோன்று என்றால்–இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளிடம் முழுகாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்பதைப் போன்று) இந்த கவுன்சிலில் சிலர் விருத்தசேதனம் அவசியம் (15 : 5) என்றனர். பெரிய விவாதம் உண்டாயிற்று (15 : 7). இரட்சிப்பு கிருபையினால் உண்டாயிற்று கிரியையினால் (விருத்தசேதனம்) அல்ல என்பதை உணர்ந்த அவைத்தலைவரும், இயேசுவின் சகோதரருமான யாக்கோபு குழப்புகிறவர்கள் உண்மையானவர்களல்ல (15:24) என்றும் இப்படிப்பட்ட வார்த்தைகளால் குழப்பக்கூடாது என்றும் (15 : 19) புறம்பான யூதன் யூதனல்ல; உள்ளான யூதனே யூதன் என்றும் கூறி புதுப் பொருளை ஊட்டினார். இதுபோன்று ஒருவனை இஸ்ரவேலனாக்குகிற விருத்தசேதனம் எப்படி புதுப்பொருளை பெற்றதோ அதே போன்று ஞானஸ்னானமும் புதுப்பொருளை அறியவேண்டும்.

இயேசுவின் கட்டளை :

உலக மீட்பர் இயேசு பிதா, குமாரன், தூய ஆவியரின் நாமத்தில் ஞானஸ்னானம் கொடுங்கள் என்றார். இங்கு தண்ணீரால் ஞானஸ்னானம் கொடுங்கள் என்று சொல்லவில்லை. காரணம் திருமறையில் – பாடுகளின் ஞானஸ்னானம், ஆவியின் ஞானஸ்னானம், திருவசன முழுக்கு, மறுஜன்ம முழுக்கு, என்று அனேக முழுக்குகள் சுத்திகரிப்பையும், தியாகத்தையும், பரிசுத்த வாழ்வையும் சுட்டி நிற்கின்றன.

சொற்பொருள் :

'டபால்' என்ற எபிரேய சொல்லிற்கும், 'பாப்டிசோ' என்ற கிரேக்க சொல்லிற்கும் கழுவுதல், தோய்த்தல், சுத்தம் செய்தல், தெளித்தல், மூழ்குதல் என பல பொருட்கள் உள்ளன.

ஐந்துவித ஞானஸ்னானங்கள்

"ஞானஸ்னானங்கள்" என்ற நூல் தலைப்பை கொடுத்ததின் காரணம் கிறிஸ்தவ மக்களுக்கு ஐந்து வித ஞானஸ்னானம் உண்டு என்றும் இவைகளுடைய பொருள் வெவ்வேறுபட்டது என்றும் தெரியாது. ஆகவே "இயேசு எடுத்ததுபோன்று" எனவும் வாதிடுவர். இந்த ஐந்து வித ஞானஸ்னானங்களில், ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிடமுடியாது. இதற்கு நல்ல ஓர் சான்று அப். 19 : 1-6 ல் உள்ளது. எபேசுவில் பவுல் ஊழியம் செய்யும் போது "எந்த ஞானஸ்னானம் பெற்றீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள், யோவான் கொடுத்த ஞானஸ்னானம்" என்றார்கள். பவுல் திரும்ப (இரண்டாவதும்) கிறிஸ்தவ ஞானஸ்னானம் கொடுக்கிறார். ஆக யோவான் ஞானஸ்னானமும், கிறிஸ்தவ ஞானஸ்னானமும் ஒன்று என்றால் திரும்ப கொடுத்திருப்பாரா ?

(i) யூத ஞானஸ்னானம் (Jewish Baptism)

(ii) புறஜாதியர் ஞானஸ்னானம் (Proselytes Baptism)

(iii) யோவான் ஸ்னாபகன் ஞானஸ்னானம்
(John's Baptism)

(iv) இயேசுவின் ஞானஸ்னானம்
(Baptism of Jesus)

(v) கிறிஸ்தவ ஞானஸ்னானம்
(Christian Baptism)

(i) யூத ஞானஸ்னானம் :

யூதர்கள் சுத்திகரிப்பை தலையாக எண்ணினர். இது தினமும் செய்துவருகிற ஒரு யூத ஆசாரம். ஆலய தொழுகைக்கும், பலிபீடத்தில் செல்லும் போதும் இதனை செய்வர். அவர்கள் ஆசரிப்பு கூடாரத்துக்குள் பிரவேசிக்கும்போது...சாகாதபடிக்கு தங்களை கழுவக்கடவர்......தங்கள் கால்களையும், கழுவக்கடவர். இது.........நித்திய கட்டளையாகும் என்றார் (யாத். 30:19–21). இங்கு சுத்திகரிப்புக்கு கை, கால்களை மாத்திரம் தண்ணீரால் **கழுவ** வேண்டும். சாகாதபடிக்கு என்றால் இந்த சுத்திகரிப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர் என்றும், நித்திய கட்டளையாக இருந்தது எனவும் உணர முடிகிறது. இது ஒரு முறை எடுப்பது அல்ல; தினந்தோறும் சுத்திகரிப்புக்காக செயல்படுத்தும் ஒரு நிகழ்வு. பவுல்...அவர்களுடனே தானும் சுத்திகரிப்பு செய்து கொண்டு தேவாலயத்தில் பிரவேசித்து... சுத்திகரிப்பு நாட்களை நிறைவேற்றுவேனென்று அறிவித்தான் (அப். 21 : 26).

தினமும் சாப்பிடும் முன்பும், விருந்து வீட்டிற்குள் புகுமுன்பும், ஆலயத்திற்கு போகும் முன்பும் நடக்கும்

நிகழ்ச்சி. மாற்கு 7 : 4-ஐ பார்க்கும்போது கடையி லிருந்து வரும்போதும், ஸ்னானம் பண்ணாமல் சாப்பிடமாட்டார்கள். அப்படியே செம்புகளையும். கிண்ணங்களையும் கழுவுகிறதுமல்லாமல் வேறு அனேக ஆசாரங்களையும் கைக்கொண்டு வருவார்கள். ......அடிக்கடி கை கழுவினாலொழிய சாப்பிடமாட்டார்கள் (மாற்கு 7 : 3). இவ்விடத்தில் "பாப்டிசோ" என்ற வார்த்தை கழுவுதல் என்ற பொருளோடு சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித ஜஸ்டின் என்ற இரத்த சாட்சி கூறும்போது, "We then bring .. where there is water, washed in the name of Father, Son, and Holy Spirit (John Foster, Church History I, the first advance, A.D. 50-500; SPCK, 1976, P. 23)

லூக்கா 11:38 - ஐ பார்க்கும்போது கை கழுவாததைக் கண்டு பரிசேயர்கள் ஆச்சரியப் படுகிறார்கள். இது ஆசார முக்கியத்துவத்தை குறிக்கிறது. இப்படிப்பட்ட சுத்திகரிப்பு பலவித ஸ்னானங்கள் என்று புதிய ஏற்பாட்டு திருச்சபை அமைந்த பிற்பாடும் இருந்து வந்தது. இதனை எபிரேய. ஆக்கியோன் நிராகரிக்கிறார். இந்த சடங்குகள் செய்யாவிட்டால் சாவு (பழைய ஏற்பாடு) என்பது நிராகரிக்கப்படுகிறது. எபி. 9:10-ல்...பலவித ஸ்னானங்களும், சரீரத்திற்கேற்ற சடங்குகளே யல்லாமல் வேறல்ல என காணமுடிகிறது. இவ் வசனத்தில் ஒருவார்த்தையை மனதில் கொள்ள வேண்டும் என விரும்புகிறேன். அது

"பலவித ஸ்னானங்கள்". எனவே பலவித ஸ்னானங்கள் இருந்தன என்பது வெள்ளிடைமலை. ஆக இந்த ஸ்னானத்தை கிறிஸ்தவ ஸ்னானத்திற்கு ஒப்பிட முடியாது.

(ii) புறஜாதியார் ஞானஸ்னானம்:

ஞானஸ்னானத்தை யூத உலகம் மாத்திரமல்ல பிறமத உலகமும் அறிந்திருந்தது. அந்தரங்க மதங்கள் (Mystry Religions) கூட ஞான ஸ்னானத்தை ஒரு புகுவாசலாக வைத்திருந்தனர். The Mystry religions like **Isis** and Serapis had ritual of cleansing (Jurgens, The Faith of the Early Fathers, Vol: I., Theo. Pub, Bangalore 1984, P. 2). சுருங்கக்கூறின் புறமதங்களிலும் இந்த சுத்திகரிப்பின் முறை இருந்தன என்பது தெளிவு.

புறஜாதி ஞானஸ்னானம் என்றால் புற மதத்திலிருந்து யூதனாக விரும்பும் மனிதன் எடுக்கும் ஞானஸ்னானம். யூதனாக விரும்பும் புறஜாதிமனிதன் முதலில் கை, கால் நகங்களை வெட்ட வேண்டும். இரண்டாவது தலை முடியை சிரைத்துவிடுவர், தொடர்ந்து விருத்த சேதனம் செய்து ஞானஸ்னானப்படுத்துவர். அதோடு ஒரு பலி செலுத்துவர். இந்நிகழ்வு கண்டிப்பாக மூன்று சாட்சிகள் இருக்க வேண்டும். இம்மூன்று சாட்சி களில் ஒருவராவது சனகரீம் சங்கத்து உறுப்பினராக இருக்க வேண்டும். இந்த ஞானஸ்னானத்தின்போது யூத ரபீ கேள்வி கேட்பார்.

கேள்வி : இஸ்ரவேலர் துன்பப்படும் காலம் வரும் என அறிவாயா ?

பதில் : இது எனக்குத் தெரிந்ததே

கேள்வி : பின் ஏன் யூத மதத்தில் சேர விரும்புகிறாய் ?

பதில் : யூத மதத்தில் சேர நான் தகுதியற்றவனே

ஏன் இந்த சுத்திகரிப்பின் சடங்கை செய்கிறார்கள் என்றால் அடுத்த மதங்கள் தீட்டுள்ளவைகள். ஆகவே புறமதத்தான் ஏற்கனவே புறமத ஞானஸ்னானம் எடுத்தவன். தற்போது யூதனாகும்போது திரும்பவும் எடுப்பர். இப்படி யூத ஞானஸ்னானம் பெற்றவன் யூத மதத்தில் ஒரு சிறு குழந்தை எனக் கருதுவர். இவர் தன் சகோதரியைக் கூட விவாகம் செய்யலாம். காரணம் யூத கருத்துப்படி யூத ஞானஸ்னானம் பெற்றவுடன் பழைய உறவு முறிகிறது. இப்போது சிந்தியுங்கள் யூத ஞானஸ்னானமும், புறஜாதியான் ஞானஸ்னானமும் ஒன்றா? இரண்டா ? இரண்டும் இரண்டு பொருளுடையன. இணைக்கமுடியாது.

(iii) யோவான் ஸ்னாபகன் ஞானஸ்னானம் :

இவர் ஆசாரிய மற்றும் இறைவாக்கினர் வரிசையைச் சார்ந்தவர். மக்களுக்காக இறைவனிடம் வேண்டுகிறவர் ஆசாரியர். இறைவன் வாக்கை மக்களுக்குப் போதிப்பவர் இறைவாக்கினர். ஏசாயா முன்னுரைத்தவர் இவரே (ஏசா. 40 : 3, 5). இவர் சவக்கடல் பக்கமுள்ள குமரான் சமூகத்தைச்சேர்ந்த

எசீனர். ஞானஸ்னானச் சடங்கை அடிப்படைத் தொழிலாகக் கொண்டவர் (isid. P. 2), ஆனால் இச் சடங்கின் பொருளற்ற மற்றும் உயிரற்ற தன்மையை உணர்ந்தனர். எனவே புது உயிருள்ள கருத்தை ஊட்ட ஞானஸ்னானம் எடுக்க வந்தவர்களுக்கு யோவான் கொடுக்க மறுக்கிறார்.மக்கள் பெற்றோருக்கு ஊறு செய்துவிட்டு கொர்பான் காணிக்கை கொடுத்து பரிகாரம் செய்ய முடியாது என்பதற்கிணங்க. இருதயத்தில் அக்கிரமம் வைத்து மீட்பு பெறமுடியாது என்பதை இவர் உணர்கிறார். ஆகையால் இரட்சிப்பு என்றால் என்ன என்பதையும் யோவானின் ஞானஸ்னான போதனையில் அறியலாம்.

இங்கு பாவ மன்னிப்புக்கும், மனமாற்றத்திற்கும் ஞானஸ்னானம் வழிநடத்தவேண்டும் என வலியுறுத்துகிறார் (லூக். 3:6). பாவமன்னிப்பையும், மனந்திரும்புதலையும் அடைந்தபின் எடுப்பதுஅல்ல. ஆனால் அவற்றிற்கு வழிநடத்துதலுக்கேற்ற ... (லூக். 3:6) ஞானஸ்னானத்தைப் போதித்தார். இவர் ஜலத்தால் ஞானஸ்னானம் கொடுத்தார். இங்கு "தண்ணீரால்"என்பதை குறிப்பாக கூறுவதை காண்க. மேலும் "ஆல்" என்ற சொல் இங்கு கருத்தேந்தி நிற்கிறது. தண்ணீரில் அல்லது தண்ணீருக்குள் அல்ல எனக்குப்பின் வருகிறவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்னானம்கொடுப்பார்.இங்கு வார்த்தையளவில் எடுத்தால் அக்கினியைத் தலையில் போடவேண்டும். இதில் இயேசு நம்மில் உறைந்து, சுத்திகரித்து சகல சத்தியத்துக்குள்ளும் நடத்துவார் என்பதுதான்

பொருள். அக்கினியால் ஞானஸ்னானம் என்ற வார்த்தை தண்ணீர் ஞானஸ்னானத்தைக் குறிக்க வில்லையெனினும், 'ஞானஸ்னானம்' என்ற பதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆக ஞானஸ்னானம் தண்ணீரோடு தொடர்பு இல்லாததையும் குறிக்கிறது என்பதையும் உணர்க.

இரட்சிப்பு என்றால் என்ன என்பதை யோவான் தெளிவாக விளக்குகிறார். பாரம்பிரியத்திற்கு (Religion without reality '.சவுக்கடி கொடுத்து உண்மை வாழ்வுக்கு விடை தருகிறார். ஆகாயத்தில் இறைவனை தேடுவது அல்ல; சன்மார்க்க வாழ்வும் அல்ல; வெளிமாற்றமும் அல்ல. [சிலர் இரட்சிப்பு அடைந்த உடன் வெள்ளை ஆடை அணிவர், பொன்னாபரணங்களை கழற்றிவிடுவர் — சிலர் எல்லா பொன்னாபரணங்களையும் கழற்றி தாலிமட்டும் அணிவர் — இதனால் எந்தப் பொருளும் இல்லை. மாந்தருக்கு கடவுள் கொடுத்த வரப்பிரசாதம் மூன்று ஆசைகள்—மண்ணாசை, பொன்னாசை, மாம்சஆசை. இதில் ஏதேனும் ஒரு ஆசை இல்லையென்றால் மனிதனாகக் கொள்ளமாட்டார். ஆனால் ஆசையை பயன்படுத்துகிற முறையில் இருக்கிறது நல்லதும் கெட்டதும். சான்றாக பண ஆசையினால் ஒருவரை கொன்றோ, வஞ்சித்தோ எடுப்பது பாவம். முறைப்படி பணம் ஈட்டுவதில் தவறில்லை. ஒன்று கூட கூற விரும்புகிறேன். பொன்னாசையை விட்டவர்களுக்கு மற்ற இரண்டு ஆசைகளிலும் அதிக நாட்டம் இயற்கையாக வரும் (உ.ம்) ஒரு கை இழந்தவனுக்கு அக்கையின் வலிமை அடுத்த கையில் அமையும்.

என்பது இயற்கை வழி. ஆக ஆசை நல்லதுதான் அதற்காக ஆசைக்காக மனிதர் வாழக்கூடாது என்பதுதான் உண்மை] இப்படிப்பட்டவர்களை விரியன் பாம்புக்குட்டிகளே என அழைக்கிறார்.

மனந்திரும்புதல் என்றால் மூன்று முறைகளில் நாம் மாற்றம் அடைந்திருக்க வேண்டும். இதனை யோவான் ஸ்னாபகன் தன்னிடம் மனந்திரும்ப என்ன செய்யவேண்டும் என்று கேட்டவர்களுக்குச் சொல்கிறார் (i) லூக். 3:11 ஏழைகளுக்குக் கொடுக்கவேண்டும். ஏழைகளுக்கும், இல்லாதோருக்கும் உதவுவது மனந்திரும்புதலுக்கு அடையாளம். கிருபையால் இரட்சிக்கப்பட்ட நாம் கிரியையில் (யாக். 2:15,16) வெளிப்படுத்தவேண்டும் (ii) லூக். 3 : 13 உங்களுக்குக் கட்டளையிட்டதற்கு அதிகமாக வாங்காதீர்கள். லஞ்சம் வாங்காமல், வாழ்வில் இழிவான ஆதாயம் தேடாமல், முறைகேடான பணஆசையில்லாமல் இருப்பது. ஒரு அதிகாரி லஞ்சம் வாங்குகிறார் என்றால் அவர் மக்களுக்கு நன்மைசெய்ய முடியாது. (iii) லூக். 3:14 நீங்கள் ஒருவருக்கும் இடுக்கண் செய்யாமலும், பொய்யாய்க்குற்றம்சாட்டாமலும்...இருங்கள். அடுத்தவனுக்கு தீங்கு செய்யாமலும், நினையாமலும் இருக்கவேண்டும். நன்மை செய்ய அறிந்தும் அதைச் செய்யாதிருத்தலும் தவறு. எனவே இரட்சிப்பின்கனி உதவி செய்வதிலும், லஞ்சம் முதலியவற்றில் ஈடுபடாமலும், தீங்குசெய்யாமலும் இருத்தலே என உணர்க.

யோவான் ஸ்னாபகன் தன்னிடம் ஸ்னானம் பெற வந்தவர்களிடம், தடுத்து புது பொருளையும், மனமாறுதலாகிய உள்ள சுத்தமும் அவசியம் எனச் சுட்டிக்காட்டி, ஞானஸ்னானம் கொடுக்கிறார், இது பாவ மன்னிப்பு அடைந்தபிறகு எடுப்பது அல்ல; ஆனால் பாவ மன்னிப்புக்கு நேராக வழி நடத்துவதற்கான, ஞாஸ்னானம் (லூக். 3:6-மனந்திரும்புதலுக்கேற்ற)

கிறிஸ்தவ ஞானஸ்னானமல்ல :

யோவான் கொடுத்த ஞானஸ்னானம் கிறிஸ்தவ ஞானஸ்னானமல்ல. இதற்குமுன்னால் சொல்லப் பட்ட ஞானஸ்னானங்களுமல்ல. ஒவ்வொன்றும் வித்தியாசமான பொருள் கொண்டவை. இதற்கு நல்ல சான்று எபேசுவில் நடந்தது (அப். 19:1-6). இங்கு பவுல் கொடுத்தது இரண்டாவது ஞானஸ்னானமல்ல. இது முதல் கிறிஸ்தவ ஞானஸ்னானம்.

(iv) இயேசுவின் ஞானஸ்னானம் :

இயேசு ஞானஸ்னானம் எடுக்கவேண்டும் என்ற முன்னறிவிப்பு எதுவும் இல்லை. இறைவாக்குகளும் இல்லை. சடங்குகளுக்கு அப்பால் புதுப்பொருளை உணர்த்தும் யோவானின் ஞானஸ்னானத்தை இயேசு ஏற்றார். யோவான் தன் ஊழியத்தின் முன்னோடி என்பது தெரியும். எனவேதான் யோவான் எங்கு ஊழியத்தை முடித்தாரோ (கலிலேயா மாற்கு 1:9) அங்கிருந்து (மா. 1:14) இயேசு ஊழியத்தைத் தொடங்குகிறார்.

இதுவரை இயேசுவின் ஊழியம் தொடங்கவில்லை. ஆனால்முப்பது வயதுவரை சிலுவை ஸ்னானத்திற்கு (நீங்கள் அறியாத பாத்திரம் யோ.4:32, 34)ஆயத்தம் அடைந்து கொண்டிருந்தார். அதாவது (i) மனிதத் தேவைகளைக் கற்றார் (லூக். 2 : 52) (ii) வேதம் கற்றார் (லூக். 4:16). ஜெப ஆலயங்களில் வாசிக்கப் பயிற்சி பெற்றிருந்தார். அல்லாவிட்டால் பெரிய பண்டிகை தினத்தில் இவருக்கு வாசிக்க வாய்ப்புக் கிடைத்திருக்காது. (iii) எழுதக்கற்றுக்கொண்டார் (யோ. 8:8). கி. பி. 989–ல் வெளியான அர்மீனியன் பிரதியில் இயேசு குற்றம் சாட்டியவர்களின் பாவங்களைத் தரையில் எழுதினார் என சொல்லப் பட்டிருக்கிறது. (iv) குடும்பத்தை கவனித்தார். (v) விவசாயத்தைக் கவனித்ததால் விதைக்கிறவன் உவமையை சொல்ல முடிந்தது. ஆக குடும்ப மற்றும் உலக உதவிகள் செய்வதின் வழி உலகத்தை மீட்பதற்குத் தன்னை தயார் செய்துகொண்டார்.

யோவானிடம் இயேசு ஞானஸ்னானம் பெற்றவுடன் (மா. 1 : 9) பாத்திரத்தைப் பருகத்தொடங்குகிறார். அதாவது யோவான் ஸ்னானம் முடிந்தது. சிலுவை ஸ்னானம் தொடங்குகிறது. இது சடங்கு வாழ்வுக்கு முடிவும் உண்மை வாழ்வுக்கு தொடக்கவுமாகும். சிலுவைப் பாதைதான் உண்மை வாழ்வு. அதுதான் “நீங்கள் அறியாத பாத்திரம்” — மூழ்க வேண்டிய பாத்திரம் (ஸ்னானம்) இந்த ஸ்னானம் அகலக்கூடுமானால் அகலட்டும் என்று ஜெபித்தார். அகலவில்லை; அதில் மூழ்கினார். இதை கருத்தில் கொண்டுதான் இயேசு ஞானஸ்னானம் பெற்றவுடன்

யோவான் இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றார்.

இயேசுவின் ஞானஸ்னானம் முன்பு கூறிய ஞானஸ்னானங்களைவிட, தனிச்சிறப்பும், தன்மையும், முற்றிலும் வேறுபட்ட பொருளையும் தருகிறது. இயேசுவைப்போன்று ஞானஸ்னானம் எடுக்க வேண்டுமென்பது அறிவுடைமையன்று. நமது ஸ்னானத்தை இயேசுவின் ஸ்னானத்தோடு இணைக்க முடியாது. காரணம் (i) யோவான் கொடுத்த ஞானஸ்னானம் பாவ மன்னிப்புக்கு என்று கொடுத்தார், அதே வரிசையில் இயேசுவை நிறுத்த முடியாது. இயேசு பாவியில்லை. இதை இயேசுவே சொன்னார் (யோவா. 8:46). (ii) இயேசு எடுத்த ஸ்னானம் போன்று என்றால் அவருக்கு விருத்தசேதனம் உண்டு. (iii) இயேசு எடுத்தது போன்று என்றால் அவர் முப்பதாம் வயதில் எடுத்தார். தற்போது அறிவு வந்தபிறகுதான் ஞானஸ்னானம் கொடுக்கவேண்டும் என்கிறவர்கள் 15-வயது முடிந்தவுடன் அறிவு வந்தது என்பது தவறு. இப்போதுதான் அவர்கள் அறிவு சிதறும் நேரம் என்பதை உணர்க. (iv) இயேசு எடுத்தது போன்று என்றால் அவர் யோர்தானிலல்லவா எடுத்தார். (சில முறைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட அவர் எடுத்த இடமும் வயது வரம்பும் ஏன் முக்கியமாகவில்லை – யோசிக்க) (v) அவர் எடுத்தது போன்று என்றால் 'அவர் பரிசுத்தர்' (can anybody be a perfect?)

இயேசு பாவியல்ல பதிலாள் :

இயேசு ஞானஸ்னானம் எடுத்ததின் ரகசியம் என்ன ? அவர் மக்கள் வரிசையில் நிற்கிறார். அவர் பாவியல்ல பதிலாள் (யோ. 1 : 29). அவர் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு அனேகருடைய பாவங்களைத் தாமே சுமந்து...(ஏசா. 53:12) பவுல் இதனைப் பாவமில்லாத அவரை நமக்காக பாவமாக்கினார் என்கிறார். நமது பாவங்களை அவர் சுமக்கிறார். நாம் இருக்கவேண்டிய இடத்தில் (Replacement Theory) அவர் இருக்கிறார்.

இதுபோன்று இஸ்ரவேல் மக்கள் பாவம் செய்தபோது மோசே அவர்கள் பாவத்தை மன்னித் தருளும்; இல்லையேல் என் பெயரை கிறுக்கிப்போடும் என்று வாதிடுகிறார் (யாத். 32 : 32). தூய பவுல் சொல்லும் போது “அவன் கடனை என் மேல் சுமத்தும்” (பிலேமோன் 18) என்கிறார். இதுபோன்று இயேசு பாவிகள் எனத் தள்ளிவிடாது அவர்களை விடுவிக்க, அவர்களுக்காக மக்கள் வரிசையில் நிற்கிறார்.

உலகப் பொறுப்புகளிலிருந்து ஓய்கிறார் :

உலகப் பொறுப்புகளிலிருந்து ஓய்ந்து பரலோகப் பொறுப்புகளை ஏற்கிறார். (from earthly responsibilities to Heavenly responsibilities) மரியாளின் மகன் உலக மகனாகிறார். தச்சனுடைய மகன் ரபீ ஆகிறார். ஞானஸ்னானத்தின்போது இதனை

கடவுள் ஏற்றுக்கொள்கிறார். "இவர் என் நேச குமாரன்" என்று ஞானஸ்னானத்தின்போது கடவுள் தன் மகனாக ஏற்கிறார். (மாற்: 1:11) இதை மறுரூபமலையில் உறுதிசெய்து 'இவருக்குச் செவி கொடுங்கள் (மாற். 9:7) என்கிறார். ஞானஸ்னானத்திற்குப்பின் உலகை மீட்க புறப்படுகிறார். (லூக். 4:18. ஏசா. 61:1-4).

எதிர்ப்புக்களை சந்திக்கத் தொடங்குகிறார் :

ஊழிய தொடக்கத்திலேயே எதிர்ப்புக்கள் வலுக்கின்றன. (மாற். 2:7) (From comfort to confrontation) தீய சக்திகளோடு போராடி வெற்றிபெற வலிமைக்காக வனாந்திரத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது (லூக். 4 : 1ff). தீய சிந்தனையாளரையும், தீமை செய்கிறவர்களையும் எதிர்க்க வேண்டியிருந்தது (மா. 14 : 63ff). போராட்டத்தின் விளைவாக சிலுவை ஸ்னானத்தை (லூக். 12:50) பருக வேண்டியிருந்தது. இதனால் நியாயப்பிரமாணம் (திருச்சட்டம்) செய்ய முடியாததை இயேசு செய்து நிறைவேற்றுகிறார். பாடுகளும் தியாகங்களும்தான் இயேசு போதித்த ஸ்னானம் இன்று சீர் திருச்சபைகளில் அதிக பிரச்சனைகள் வருகின்றன என்பர் இது உண்மை. ஏன் தெரியுமா? கல்விக்கூடங்கள், மருத்துவமனைகள், தொழிற் கூடங்கள் தொடங்கி சமூகத்திற்கு வாழ்வு கொடுக்கிறது. இப்படி சமூக முன்னேற்றத்தில் ஈடுபடும் போது பிரச்சினை இல்லாமலிருக்காது. செயல்

பாடுகள் வரும்போது பிரச்சினைகள் வரும். பிரச்சினை இருக்கிற இடத்தில்தான் உண்மையான முழு வளர்ச்சியும் இருக்கும். முட்டாள்கள் கீழே விழமாட்டார்கள். காரணம் தெரியுமா? இவர்கள் மேலே ஏறவே மாட்டார்கள்.

வரலாற்றை சற்று பார்த்தால் தனிநபர் ஊழியம் என்று கூறி மக்கள் தாங்களே வளருகிறார்களே தவிர சமுதாய வளர்ச்சிக்கு என்ன விட்டுச் சென்றார்கள்? சொகுசான வாழ்வு நடக்கிறதே ஒழிய பாடுகள் இல்லை. பிரச்சினையும் இல்லை. கடவுளோடு இன்பம் காண்கிறார்களே ஒழிய அதன் தொடர்ச்சியான மக்கள் பிரச்சனையில் ஈடுபடுவது இல்லை. பேதுரு மறுரூப இன்பத்தைக் கண்டு இங்கே இருப்பது நல்லது என்றார். ஆனால் இயேசு மலையடிவாரத்தில் தீராநோயைப் பார்த்து மலை இன்பத்தைவிட மக்கள் பிரச்சினையிலும், இயலாமையிலும் பங்குபெறுவதில்தான் உண்மை இன்பம் (வாழ்வு) என நினைத்து இயேசு கீழே இறங்குகிறார். இன்று?

யோர்தானில் ஞானஸ்னானம் பெற்றார்

(1) யோர்தான் மரண வாயிலைக் குறிக்கிறது. யோசுவா இதனைக் கடந்து வெற்றிவாகை சூடினார். எலிசாவுக்கு இதன் மறுகரையிலிருந்து வாழ்வு கிடைத்தது. மக்களின் வாழ்வுக்காக மரண யோர்தானை இயேசு கடக்கவேண்டியிருந்தது.

(2) வானம் திறக்கப்பட்டது—பரமனின் பணிக்கு பரத்திலிருந்து உதவியும் அங்கீகாரமும் கிடைத்தன. இவருடைய பாடுகளின் இந்த ஸ்னானம் அங்கீகரிக்கப்பட்டது.

(3) இது உறுதிப்பாட்டின் சமயம்.அதாவது மேசியா என்ற எதிர்பார்ப்பு இப்போது உறுதியாகிவிட்டது.

(4) பரிசுத்தாவியர் நிகழ்வு — பாடுகளை சகிக்க பரமனின் உதவி கிடைத்தது. ஒத்தினியேல், கிதியோன், எப்தா போன்றோருக்கு ஒரு குறிப்பிட்ட வேலைக்காகக் கொடுக்கப்பட்டது. இயேசுவுக்கு நிரந்தரமாகக் கொடுக்கப்பட்டது எனலாம். இவர் என் நேசகுமாரன்...என்ற வசனம் சங். 2 : 7-ன் நிறைவேறலாகும். சங். 2 மேசியாவைக் குறித்த சங்கீதம் என யூதருக்கு தெரியும். இயேசுவும் தான் இறைமைந்தர் என்பதை உணர்கிறார். ஆகவே சிலுவை ஸ்னானத்திற்குத் தன்னை அர்ப்பணிக்கிறார். தான் சொகுசுவாழ்க்கையை விரும்பிய செபதேயுவின் குமாரர்கள் யாக்கோபு, யோவானுக்கு மூழ்கவேண்டிய ஸ்னானத்தைக் (லூக்கா 12 : 50) கற்றுக்கொடுத்தார்.

இயேசுவின் ஞானஸ்னானமும்- கடவுள் நீதியும்:

யோவான் இயேசுவிடம் நாம் உம்மாலே ஞானஸ்னானம் பெற வேண்டியதாயிருக்க நீர் என்னிடம் வரலாமா ? (மத். 3 : 14) எனக்கேட்க; இயேசு : இபோது இடம் கொடு இப்படி எல்லா

நீதியையும் நிறைவேற்றுவது ஏற்றதாயிருக்கிறது (3 : 15).

இந்த 'நீதி' ஞானஸ்னானத்தில் (தண்ணீரில்) கிடைத்தது அல்ல. ஞானஸ்னானத்தில் தன்னை "பாவிகளோடு" சேர்த்துப் பேசினதுதான் இந்த நீதி. நாம் அவருக்குள் தேவ நீதியாகும்படி பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார் (II கொ. 5 : 21). அவருடைய இறப்பினால் நாம் நீதிமானாக்கப் பட்டோம். நாம் அவர் மீட்பில் பங்கு கொள்ளும் போது (பாடு-மூழ்க வேண்டிய பாத்திரம்) நீதிமான் களாகிறோம் (ரோ. 5:9). கிறிஸ்துவில் பற்றுறுதி வைத்து நாம் பெற்றுக்கொண்ட மீட்பில் நீதிமான் களாக்கப்படுகிறோம் (ரோமர் 3 : 22-31; 4 : 4-5). விசுவாசத்தில் தான் நீதிமான்களாகிறோம் (ரோ 5:1). அவருடைய இரத்தத்தினால் நீதிமான்களாக்கப் படுகிறோமே தவிர (ரோ. 5 : 9) ஞானஸ்னானத் தினாலல்ல. ஆக ஜடப்பொருளாகிய தண்ணீரில் அல்ல மெய்ப்பொருளாகிய இயேசுவில் விசுவாசம் வைப்பதே நீதி.

கள்ளப் போதகம் :

(1) இயேசுவின் பாடு-மரணமும், உயிர்த்தெழுதலில் நம்பிக்கையும் தான் நம் பாவங்களை மன்னித்து மீட்பு தந்ததே ஒழிய ஞானஸ்னானம் அல்ல. முழுகி எடுத்தால்தான் மீட்பு என்பது கள்ளப் போதகமே. இது உயிரை ஈந்த ஆட்டுக்குட்டியானவருக்கு எதிரி. இது எப்படியிருக்கிறது என்றால் பவுல் ஊழியத்தால் இரட்சிப்பு அடைந்த மக்களிடம் யூதேயாவிலிருந்து

சிலர்வந்து மோசேயின் முறையின்படி விருத்தசேதன மடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள் (அப். 15 : 1) என்று போதித்ததைப் போன்றிருக்கிறது.

ஞானஸ்னானம் நாம் கடவுளுடைய பிள்ளைகள் என்பதை வெளிப்படையாக காட்டும் ஒரு ஆத்மீக ஆகாரம். அப்படியென்றால், யோவான் 3 : 5-ல் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் கடவுள் அரசை காணமுடியாது என்றாரே. இங்கு தண்ணீர் ஸ்னானம் எடுத்த (யோவான் ஸ்னானம் அல்லது யூத ஞானஸ்னானம் பெற்ற) நிக்கதோமு விடம் தண்ணீரால் மாத்திரமல்ல நீ ஆவியினால் பிறக்கவேண்டும் என்கிறார். மறுபடியும் பிறப்பது தான் ஆவியினால் பிறப்பது. மறுபடியும் பிறப்பது என்பதற்கு குறிப்பிட்டுள்ள வார்த்தை 'Anothen'. இதன் பொருள் "மேலிருந்து" (கடவுளிடமிருந்து–கடவுளுக்குள்) இதனால்தான், இந்நிகழ்ச்சிகுப்பின் தண்ணீர் ஸ்னானம் எடுக்க சொல்லவில்லை. (விரிவான விளக்கம் பின்னால் தரப்பட்டிருக்கிறது).

(2) ஞானஸ்னானம் பெற்றால் தான் பரிசுத்தாவி யானவர் அருளப்படுவார் என்பது கள்ளப்போதகம் (குறிப்பு : பரிசுத்தாவி கிடைச்சுதா ? என்று மக்கள் கேட்பதைக் கேட்டிருக்கிறேன். இந்த கேள்வியே தவறு. "பரிசுத்த ஆவி" என்றால் அகற்றிணை. பரிசுத்த ஆவியானவர் அல்லது பரிசுத்த ஆவியர் என்பது தான் சரி. பரிசுத்த ஆவியர் திருத்துவத்தில் மூன்றாவது நபர். அவர் கடவுள், தேற்றரவாளர். இதைக்கூட சரியாக புரியாதபடி "கிடைத்ததா ?" என்று கேட்பதில் ஆவியரை சரியாக யார் என புரிந்து

கொள்ளாத நிலையை உணர முடிகிறது. அது "அல்ல" அவர்) பரிசுத்த ஆவியர் நமக்குள்ளே வாசம் செய்ய ஞானஸ்னானம் ஒரு கருவி அல்ல. ஆவியரைபெற சட்டமோ வரிசையோ தேவையில்லை மொத்த ஒப்படைப்பே முக்கியம். உதாரணமாக கொர்நெலியுவை பரிசுத்த ஆவியானவர் (அப். 10:44) ஆட்கொண்ட பிறகு தான் ஞானஸ்னானம் பெற்றார்.

ஆகவே இரட்சிப்பு இயேசுவால் கிடைக்கும் ஈவு. அது சிலுவையில் ஈட்டிய சொத்து எனவே ஞானஸ்னானம் எடுத்தால் தான் மீட்பு என்பது மக்களை திசைதிருப்பும் ஓர் ஆதாய சம்பிரதாயம். திருமறையில் ஞானஸ்னானத்தால் இரட்சிப்புஉண்டு என சொல்லப்படவில்லை. கர்த்தராகிய கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது இரட்சிக்கப்படுவாய் என்பது தெளிவு. இயேசுவை ஏற்றுக்கொண்ட பிள்ளைகளை பிரித்தறிய துன்பகாலத்தில் கொடுக்கப்பட்ட அர்த்த முள்ள ஒரு மதச்சடங்கு. விருத்தசேதனம் ஒரு யூதனாகக் காட்டும் அடையாளம். அதுபோன்று கிறிஸ்தவனுக்கு ஞானஸ்னானம் ஒரு புனித அடையாளம். அடையாளம் போதிக்கிற உண்மைவழி நடப்பதே முக்கியம் (Baptismal Life).

ஆக "இயேசு எடுத்தமாதிரி" என்பது எவ் விதத்திலும் ஒவ்வாது. இயேசு எடுத்தமாதிரி-என்று சொல்லும்போது ஒரு சபைச் சரித்திர நிகழ்ச்சியில் கற்ற கதை ஞாபகம் வருகிறது. இயேசு சமாரிய கிணற்றண்டையில் இருந்தார். ஆகவே ஒருவர் இயேசு இருந்த அதேஇடத்தில் இருக்க ஆசைப்பட்டு

கிணற்றின் நாற்புறமும் இருந்து நரங்கினானாம்) இயேசு எத்தனையோ மாதிரி வைத்துப்போனார். The right meaning of Baptism starts with via Dolorosa-The way of cross ஞானஸ்னானத்தின் உண்மையான பொருள் சிலுவைப் பாதையில் தொடங்குகிறது. இயேசு ஞானஸ்னானம் பெற்றார்; கொடுக்கச் சொன்னார். எனவே இயேசுவின் ஞானஸ்னானம் தனித்தன்மையுடையது. அவரைப் போல் வாழ முடியாத நாம் அவரைப்போன்ற ஞானஸ்னானம் எடுத்தேன் என்ற உரிமை எவ்வளவு பொருந்தும் ?

கிறிஸ்தவ ஞானஸ்னானம்

கிறிஸ்தவ ஞானஸ்னானம் என்றால் கிறிஸ்துவின் பெயரால் எடுப்பது. தந்தை, மைந்தன், தூய ஆவியர் நாமத்தில் ஞானஸ்னானம் எடுக்க கடவுள் சொன்னார். (மத். 28:19; மா. 16:15ff) பரி.லூக். 24:47-ல் சுவிசேஷம் சொல்லுங்கள் என்று சொல்லி ஞானஸ்னானம் கொடுங்கள் என்று சொல்லவில்லை. மீட்புக்கு ஞானஸ்னானம் மிக முக்கியம் என்றால் லூக்கா விட்டுவிடுவாரா? பரி. யோவானுக்கு தண்ணீர்ஸ்னானத்தை விட கடவுளில் பிறக்கும் அனுபவம்தான் முக்கியம்.

மா. 16:15ff வாசிக்கும்போது விசுவாசத்திற்கு முக்கியத்துவம் இயேசு கொடுக்கிறார். விசுவாசம் உள்ளவனாகி ஞானஸ்னானம் பெற்றவன்

இரட்சிக்கப்படுவான் விசுவாசியாதவனோ (ஞானஸ்னானம் எடுக்காதவனோ என்றல்ல.) ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவான். இயேசுவை ஏற்றுக் கொள்ள பற்றுறுதியே முக்கியம். இதற்கு வெளிப்படையாக ஞானஸ்னானம் எடுக்கிறோம். வேதம் தெளிவாகச் சொல்லுகிறது, கிருபையினாலே 'விசுவாசத்தைக்'கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்.இது உங்களாலானதல்ல (ஞானஸ்னானத்தினாலல்ல.) இது கடவுளுடைய ஈவு. இரட்சிப்பு ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே கழுவப்பட்டதினால் கிடைத்தது. It's a costly Grace. இலவசமாக இரட்சிப்பு கிடைத்தாலும்,அது விலையேறப்பெற்றது.

(i) குழந்தைகள் - ஞானஸ்னானம்

குழந்தைகள் உண்மையின் மறுவடிவங்கள். கள்ளமில்லா நெஞ்சங்கள் - கள்ளமில்லா கைகள் - கள்ளமில்லா கால்கள்-கள்ளமில்லா கண்கள். ஆகவே தான் இயேசுநாதர் பிள்ளைகளை சுட்டிக்காட்டி பரலோகத்தை விளக்குகிறார். இறையரசை அடைய சிறுபிள்ளையைப்போல் ஆகவேண்டும் எனவலியுறுத்துகிறார் இயேசு. பரலோகத்தில் "சிறியோரையும், பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன்" (வெளி. 20 : 12) என யோவான் தெளிவாக வெளிப்படுத்துகிறார். ஞானஸ்னானமில்லாமல் பரலோகம் அடையமுடியாது என்று சொல்லும் அன்பர்களே, பரலோகத்தில் கடவுளோடு நிற்க கண்ட இந்த சிறியோர் (வெளி. 20:12) எப்படி வந்தார்கள் ? யோசித்தீர்களா ?

குழந்தைகளும்-விசுவாசமும் :

முதலில், விசுவாசித்து ஞானஸ்னானம் என்று சொல்லுகிறவர்களுக்கு ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். பேதுரு அப்போஸ்தலர்வாழ்வில் குறைந்தது நான்கு மனமாற்ற நிலைகள் உள்ளன.

(1) அழைக்கப்பட்டு இயேசுவுக்கு பின் சென்ற நிலை–ஆதாயம் தரும் கடலை விட்டுச் சென்றார்–ஆதரவு தரும் தகப்பனை விட்டார் – பலன் தரும் பணியை (வலை பின்னல்) விட்டார் (மத். 4:18-22).

(2) நீர் உயிருள்ள கடவுளின் மகன் என அறிக்கையிட்ட நிலை. (3) மறுதலித்தார் – பின் கண்ணீர் விட்டு அழுது தன்னை ஒப்படைத்த நிலை.

(4) இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப்பின் உறுதியான சாட்சியாக தன்னை தலைகீழாக சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்த இணையற்ற விசுவாச நிலை. இந்த நான்கு முக்கியமானவிசுவாச நிலைகள் இருந்தன. இவருக்கு எப்போது ஞானஸ்னானம் கொடுக்கவேண்டும்? சொல்லுங்கள்; அழைக்கப்பட்ட பிற்பாடா ? அல்லது கிறிஸ்து என அறிக்கையிட்ட பிற்பாடா?...எப்போது கொடுக்கவேண்டும்? இதனை வரையறுக்க அறிவு நமக்கு இல்லையே.

குழந்தைகளும் அறிவும் :

குழந்தைகளுக்கு எல்லா அறிவும் உள்ளது. ஒரு குழந்தையின் முதல் மூன்று வயதிற்குள் எதிர்கால Blue Print போடப்பட்டு விடுகிறது. வீட்டின்

பக்தி, கலாச்சாரம், பின்னணி யாவும் பிள்ளைகளை செப்பனிடும் ஏதுக்கள். பிள்ளை பார்க்கின்ற, நுகருகின்ற, கேட்கின்ற அனைத்தும் மனதிலே பதிகிறது. கிறிஸ்தவ வீட்டில் வளரும் பிள்ளை தானாக இயேசு ஆண்டவர் என்றும், வேறு மத வீட்டில் வளரும் பிள்ளை தானாக அவர்தம் கடவுள்களை அறிவதும் பிரிக்கமுடியாத இயல்பு. பசு கன்று ஈன்றவுடன் கன்று தன் தாயையும், கோழிக்குஞ்சு தன் தாய்க் கோழியையும் கட்டாயம் அறியும். பசுக்கன்று பிறந்தவுடன் பால் குடிக்க கற்றுக் கொடுத்தது யார்? இந்த அறிவைக் கொடுத்தவர் யார்? குழந்தையின் முதல் மூன்று வயதில் அடையும் அறிவுக் கூர்மையின் வளர்ச்சி பின் எந்த வயதிலும் அடைய முடியாது என்பது விஞ்ஞான ரீதியான முடிவு.

குழந்தைகள் விசுவாசம் நாம் எண்ணுகிறதை போன்று அறிவினடிப்படையிலான விசுவாசமன்று. இது சார்ந்திருப்பவரைப் பற்றும் விசுவாசம். அதாவது தந்தை பிள்ளையை "கீழே இட்டு விடுவேன், எறிந்துவிடுவேன்" என்று சொன்னாலும் பயப்படாது. காரணம் பிள்ளைக்குத் தெரியும். தந்தை எறிந்துவிடமாட்டார் என்ற அறிவு. இயேசுவே சொல்கிறார், "என்னில் விசுவாசமாயிருக்கிற (மாற்கு 9:42) (little once that believe in me) என்று. ஆக 'இந்த விசுவாசமே' தவிர உலக அறிவினடிப்படையிலான விசுவாசமல்ல (இது பைத்தியம்)

குழந்தைகளை மனிதர்களாக எண்ணாது ஒதுக்கின அவ் எண்ணத்தைக்கூட இயேசு மாற்றுகிறார். கடவுளுடைய கரிசனை பிள்ளைகள் மேலிருந்தது என்பது வேதம் தரும் உண்மை. சான்றாக, ஆகாரின் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார் கடவுள் (ஆதி. 21:17). சாமுவேல் கடவுள் சத்தத்தைக் கேட்டார். குழந்தைகள் பரிசுத்த முள்ளோர் என்பதை...“நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்பே நான் உன்னைப் பரிசுத்தமாக்கினேன் (எரே. 1:5) என்று எரேமியாவைப்பார்த்தும், தாயின் கர்ப்பத்திலிருந்து ஊழியத்திற்கு உன்னைப் பிரித்தேன் என்று (ஏசா. 49 : 1) ஏசாயாவைப் பார்த்தும், யாக்கோபை தாயின் கர்ப்பத்திலிருந்து (ஏசா. 49:5) பிரித்தேன் என்றும், நசரேய விரதம் சிறுபிள்ளையிலிருந்தே சிம்சோனுக்கு (நியாய. 13:5) கடைப்பிடிக்கப்பட்டது என்றும்; பரிசுத்தமான பெற்றோருக்கு பிறக்கும் பிள்ளை கள் பரிசுத்தமானது (I கொரி. 7 : 14) என்றும் கூறும்போது, பரிசுத்தமானவைகளை (குழந்தைகளை) விசுவாசமில்லை ஞானஸ்னானத்திற்கு தகுதியில்லை) என்று சொல்கிறவர்களுக்குத்தான் அறிவில்லையெனலாம். இயேசு விசுவாசிகள் என்று சொன்னவர்களை (குழந்தைகளை) நாம் விசுவாசமில்லை என்று சொல்லுவதற்கு நமக்கு தகுதியில்லை.

குழந்தைகளும் வாக்குத்தத்தமும் :

வாக்குத்தத்தம் (Covenant - Promise) உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் (அப். 2:39)

என்று கூறுவதினால் பிள்ளைகள் இங்கு மறக்கப்படவில்லை, மறுக்கப்படவில்லை. 3000 பேர் ஞானஸ்னானத்தில் வாக்குத்தத்தத்திற்குட்பட்ட சிறுவர்களும் அடங்கும் என்பது தெளிவான சான்று. Baptism is a sign of membership in the covenant and as in the Old Testament, the covenant extevids to believers and their children (Thompson, op cit., P. 38)

குழந்தைகளும் ஜன்ம பாவமும்:

பிள்ளைகளுக்கு ஜன்மபாவம் இருக்கிறது என்கிறது தாவீதின் காலம் (கி.மு. 11-ம் நூற்றாண்டு) ஆனால் கி. மு. 8-ம் நூற்றாண்டில் இந்த எண்ணம் மாறினது. பிதாக்கள் திராட்சப்பழம் தின்றார்கள் பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின (எசே. 18:2, எரே. 31 : 29) என்று அந்த நாட்களில் சொல்லப்பட்டன முன்னால், தகப்பன் செய்த பாவம் பிள்ளைகளுக்கு உண்டு (யாத். 20 : 5) இப்போது எவன் திராட்சப்பழம் சாப்பிடுகிறானோ (அக்கிரமம் செய்கிறானோ) அவனுடைய பற்களே கூசும் (எரே. 31 : 30) என்பது தான் உண்மை.

ஜன்மபாவமிருந்தாலும் அது சிலுவையில் கொல்லப்பட்டது என்பதை விசுவாசிக்கவேண்டும். உலகத்தின் பர்வத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி - சுமந்து தீர்த்துவிட்டார். மேலும் சிறுவர்கள் ஞானஸ்னானமில்லாமல் இருந்தால் நரகத்தில் செல்லுவார்கள் என்று சொல்லுகிறவர்கள் சற்று சிந்திப்பதவசியம். எந்த மனிதரும்

விசுவாசியாகி இரட்சிக்கப்பட்டாலும் குழந்தையின் உள்ளத்திற்கு நிகரல்ல. எந்த பெரியவன் சுத்தன் ? உண்மையை நெஞ்சைத்தொட்டுச்சொல்ல முடியுமா? (I யோ 1 : 8). இயேசு சொல்கிறார், இந்த சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதிருங்கள் என்றும், தடைபண்ணாதிருங்கள் என்றும் (மத். 19 : 13 ff) (மாற்கு 10 : 13 ff) பரலோகம் அப்படிப்பட்டவர்களுக் குரியது என்றும் (மத். 19 : 14); பிள்ளைகள் கிரீடம் என்றும் (நீதி. 17 : 6) கடவுளுடைய சுதந்திரம் என்றும் (சங். 127 : 4) கூறுகிற வேத முத்துக்களை ஒருவரும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கை யாயிருங்கள். அவர்களுடைய தேவ தூதர்கள் பரலோகத்தில் என் பிதாவின் சமுகத்தில் எப்போதும் தரிசிக்கிறார்கள். இது பிள்ளைகளின் சுதந்திரம். ஏற்கனவே கூறியபடி, ஞானஸ்னானம் பாவ மன்னிப்பு பெற்றபின் எடுப்பது அல்ல; விசுவாசியாகி எடுக்க வேண்டும். இது கிறிஸ்தவ பிள்ளைக்கு இருக்கிறது என இயேசு மொழிந்தார். நாம் வேதத்தை ஆராய்ந்து படிக்க வேண்டும். சிலர் கூறுவதைப் போன்று பாவமன்னிப்படைந்து பின் எடுக்கவேண்டும் என்று பல நிலைகளை (Stages) பின்பற்றினால் ஏராளம் ஞானஸ்னானம் எடுக்க வழிகோலுகிறதல்லவா ? சான்றாக, பாவமன்னிப்பு அடைந்து ஞானஸ்னானம் எடுத்தபின் இன்னொரு பாவம் செய்து விட்டோம் என வைத்து கொள்வோம். பின் பாவ மன்னிப்புக்கு இடம் வருகிறது. திரும்பவும் ஞானஸ்னானம் எடுக்க இடம் வருகிறதே! எனவே ஞானஸ்னானம் பாவமன்னிப்படைந்தபின் அல்ல-பாவமன்னிப்புக்கென்று-என்பதை அறிய வேண்டும்.

ஞானஸ்னானம் எடுத்தபின் நாம் பாவம் செய்வது இயல்பு. இதனை திருவசனம் ஞானஸ்னானப்படுத்தும். (திருவசனமுழுக்கு–எபே 5:26). நாம் எடுத்த புனிதச்சடங்குகளாகிய ஞானஸ்னானம் என்றும் நம்மை ஞானஸ்னானப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். சிலுவை கள்ளனுக்கு வசனம் அவன் இருதயத்தை ஞானஸ்னானப்படுத்தியது (திருவசன முழுக்கு) இதுபோன்று ஞானஸ்னானம் அனுதினமும் நம்மை கழுவிக்கொண்டே (சுத்திகரித்துக் கொண்டே — Daily Experience) இருக்க வேண்டும். Christian baptism in related not only to momentary experience but to life long growth and experience in Christ (BEM Document P. 4)

குழந்தைகளை தடை செய்கிறவனுக்கு தண்டனை:

குழந்தைகளை ஏற்றுக்கொள்ளாதவன் இயேசுவை ஏற்றுக்கொள்ளாதவன். குழந்தைகளை ஏற்றுக்கொள்ளுகிறவன் இயேசுவை ஏற்றுகொள்கிறான் (மத். 18:5) பிள்ளைகளை ஒதுக்குகிறவன் இயேசுவை தெளிவாக அறியவில்லை. சிறுவர்களை தடை பண்ணுகிறவர்களுக்கும் இடறல் உண்டாக்குகிறவர்களுக்கும் அதிகபட்ச தண்டனை வழங்க நமது நியாயாதிபதி இயேசு கட்டளையிட்டார் (மத். 18:7). தடை செய்கிறவனின் கழுத்தில் இயந்திரக்கல்லைக் கட்டி சமுத்திரத்தின் ஆழத்தில் அவனை அமிழ்த்துவது நலமாயிருக்கும் என்கிறார்.

மாற்கு 10 : 14-ல் வருகிற 'தடை' என்கிற வார்த்தை கிரேக்கத்தில் 'Kolyein' இதே கிரேக்க வார்த்தை தான் அப். 8 : 36-ல் வருகிற 'நான் ஞானஸ்னானம் பெறுவதற்கு, "தடை" என்ன என்கிற இடத்திலும் இருக்கிறது; "What is to hinter these candidate from being baptized ?" (Jerome Bibilical commendary 24 : 61). எனவே மாற்கு நற்செய்தியில் கூறப்படும் 'தடை'யும் ஞானஸ்னத்திற்குரிய தடையே என புனித ஜெரோம் சொல்கிறார். தண்ணீரில்லாமல் கைகளை வைத்து ஆசீர்வதிப்பதையும் ஞானஸ்னானம் என்று ஆதி திருச்சபை தந்தையர்கள் கூறினர். Laying on of hands by one of the apostees was reqarded as baptism என்று தெர்த்துலியன் (தெர்த்துலியன் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர்) சொல்கிறார் (Gurgens, the faith of the Early Fathers; Vol. I Banqalore : TPI, 1984, P. 128).

ஆத்மீக ஆகாரம் :

ஞானஸ்னானம் பிள்ளைகளுக்கு ஆத்மீக ஆகாரம். நாம் சிறுபிள்ளைகளுக்கு அறிவு வருமுன் நோய்க்கு மருந்து, ஆடை, ஒழுக்கம், கற்க வைத்தல் போன்ற சரீர தேவைகளை செய்யும்போது குழந்தைகளுக்கு ஆவிக்குரிய ஆகாரமாகிய திருமறைக் கற்றுக் கொடுத்தல், ஞானஸ்னானம் கொடுத்தல் ஏன் கூடாது. பிற்காலத்தில் அக்குழந்தை சொல்லும் போது தன்னை பெற்றோர்கள் சிறுவயதிலிருந்தே

கடவுள் பாதையில் வழிநடத்தியிருக்கிறார்கள் என்று தன்னை ஒருகணம் திரும்பவும் அர்ப்பணம் செய்யத் தூண்டுமே.

இயேசுவின் பிரசங்கத்தை கேட்க குழந்தைகளும் வந்தனர். இயேசு இவர்களை சுட்டிக்காட்டியல்லவா பரலோகத்தை விளக்கினார். ஏன் பெரிய விசுவாசியை சுட்டவில்லை. இயேசு ஆட்டையும், ஆட்டுக்குட்டியையும் மேய்க்கச் சொன்னாரே ஆட்டுக்குட்டிக்கும் ஞானப்பால் தேவைப்படுகிறதே (யோ. 21 : 15).

குழந்தைகள் ஞானஸ்னானம் - ஒரு வரலாற்றுப் பார்வை :

ஜெரேமியாஸ் என்ற வேதவரலாற்றுப் பண்டிதர், infant Baptism in the first four centuries, என்ற நூலில், பாவநிவிர்த்தி நாளில் பிள்ளைகளை ஞானஸ்னானப்படுத்த கொண்டு வருவதை சுட்டிக்காட்டியுள்ளார். (Jeremias, infant Baptism...SCM - London. P. 48-52) புறமதத்திலிருந்து யூதமதத்தில் குழந்தைகள் சேரும்போது, ஞானஸ்னானத்திற்கு ஒத்த விருத்தசேதனம் (பிள்ளை பிறந்த 8-ம் நாளில் செய்யப்பட்ட) செய்யப்பட்டது.

சபை வரலாற்று தந்தை ஜஸ்டின் மார்டியர் (C 100-160) (இயேசுவின் சீடர்களோடு வாழ்ந்தவர், போலிக்கார்ப்-மரணம் இவருக்கு தெரியும்) கிறிஸ்தவ பிள்ளைகள் கடவுளுடைய சீடர்கள். அவர்களை ஞானஸ்னானப்படுத்தினார். ஐரேனியாஸ் (C. 130-200) என்ற சபைத்தந்தை இயேசுவின் இரட்சிப்பு

பிள்ளைகளுக்கு நேரடியாகச் செல்கிறது என்று சொல்லி ஞானஸ்னானப்படுத்துகிறார் (Faith of the Early Church 2:22) தெர்துலியன் "De Baptism" என்ற நூலில் குழந்தைகளை ஞானஸ்னானப் படுத்தியதை சொல்லியிருக்கிறார் (Jurgans.op.cit., P. 310) To Origen infant baptism was an apostolic custom (Origen, commentary on Romans 50 : 5,9) என்று கூறுகிறார்.

சபைத்தந்தை போலிக்கார்ப் கி. பி. 155–ல் தீயிலிட்டு கொல்லப்பட்டார். இவர் சிறுவயதில் கி. பி 69–ல் ஞானஸ்னானம் பெற்றார். 'Polycarp was the child of Christian Parents baptized infancy' Gibbs, Jerusalem to New Delhi, Church History, P. 27) கிப்ஸ் என்ற சபை வரலாற்று ஆசிரியர் சொல்லும்போது, 'For this early evidence for the keeping of Sundays and infant baptism is mainly by inference' (ibid. P. 33) சபை தந்தை தெர்துலியன், (AD. C. 155-225) 'Infant baptism was effective, butit could never be repeated (ibid., P. 51) என்று சொல்லுகிறார். எனவே ஞானஸ்னானம் திரும்பத் திரும்ப கொடுப்பது ஒரு 'Moral Sin' என்றும் கூறுகிறார்.

(குறிப்பு : திருச்சபை வரலாறு; குறிப்பாக A. D. 100-300 வரை மிக முக்கியமானது. வேதாகமம் ஒருங்கிணைக்கப்பட்டது 4-ம் நூற்றாண்டு தான். ஆனால் சபைத் தந்தையர்கள் இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். இவர்கள் வழி தான்

(Traditions) திருமறை உருவெடுத்தது என்பதை உணர்க.

புனித அகஸ்டின் மிக அழகாக, 'Paganism died out infant baptism became the Rule ' (Ibid , P. 61) என்று கூறுகிறார். (அஞ்ஞானம்) மாறியது குழந்தை ஞானஸ்னானம் மலர்ந்தது என்கிறார்)

ஆக குழந்தைகள் ஞானஸ்னானம் முதல் மூன்று நூற்றாண்டுகளில் இருந்ததா ? விடை : ஆம்.

விசுவாசி ஞானஸ்னானம் (Belivers Baptism) எப்போது வந்தது :

இதனை நீங்கள் கட்டாயம் அறியவேண்டும். சபை வளர்ச்சியில் கி. பி. 6-ம் நூற்றாண்டு முதல் 14-ம் நூற்றாண்டு வரை இருண்டகாலம் என அழைப்பர். சபை வளர்ச்சி அதிகமாக இல்லை. பின் பல மத சீர்திருத்தவாதிகள் தோன்றினர். இவர்கள் சுயநலமிகுதியால் பல பிரிவுகளாகப் பிரிந்தனர். இவர்களில் ஒரு பிரிவினர் அனபாப்டிஸ்டு (Ana baptists).

அன பாப்டிஸ்டு

அன பாப்டிஸ்டுக்கள் என்றால் திருப்ப ஞானஸ்னானம் கொடுப்பவர் என பொருள். மார்டின் லூத்தர் கருத்துக்களுக்கு எதிராக சுவிங்கிளி

எழும்பினார். பின் சுவிங்கிளியிலிருந்து (Zwingli) ஒரு பிரிவினர் குழந்தை ஸ்னானத்தை எதிர்த்து பிரிந்தனர். இதைப்பற்றிய ஒரு கலந்துரையாடல் சூரிச் (Zurich) நகரில் கி. பி. 1525 ஜனுவரியில் நடந்தது. இதில் சுவிங்கிளியினர் எடுத்த முடிவானது 'baptism was the Christian equivalent of the Jewish ceremony of circumcion . ... Baptism is a sign of membership in the covenant .. the Covenant extends to belivers and their children'. (Thompson, op. cit., P. 38) (அப். 2:29) பின் ஓட்டெடுப்பு நடந்தது. இதில் சுவிங்கிளி (நடைமுறையில்இருந்த குழந்தை ஞானஸ்னானம்) வெற்றி பெற்றார். உடனே எதிர்தரப்பினர் வெளியேறி சூரிச் (Zurich) என்ற இடத்தில் எதிர்கூட்டம் நடத்தினர். 'From this event the rebels came to be known as, 'Ana baptists', that is 'the again baptized' or re-baptized, because of course they had all been baptized before as babies (ibid., P. 39),

இதில் இன்னொரு உண்மை தெளிவாகிறது; they had all been baptized as babies-இதிலிருந்து குழந்தைகள் ஞானஸ்னானம் முன்னமே வழக்கத்திலிருந்தது என்பது வெள்ளிடமலை.அக விசுவாசிகள் ஞானஸ்னானம் 15-ம் நூற்றாண்டில் வந்தது என சரித்திரம் கூறுகிறது. மேலும் விசுவாசி ஞானஸ்னானம் 18-ம் நூற்றாண்டு வரை பிரபலமாகவில்லை... the Ana baptists had any legal status until the eighteeth century (ibid., P. 39).

விசுவாசி ஞானஸ்னானம் ஸ்தாபகமானது கி. பி. 1609-ல். John Smith, an exile, who in 1609 instituted believers baptism was under Menonite influence (Jerusalem to New Delhi, op cit., p 180) இந்த அனபாப்டிஸ்டு மக்கள் தான் குழந்தை ஞானஸ்னானத்தை எதிர்த்தனர். ஆக, விசுவாசி ஞானஸ்னானம் 1525-க்கு பிறகு வந்தது என்றும் குழந்தை ஞானஸ்னானம் அதற்குமுன் வழக்கத்திலிருந்தது என்பதும் தெளிவு.

இந்த பிரிவினைவாதிகள் ஒன்றாகச் செயல் பட்டார்களா ? அதுதான் இல்லை. கி. பி. 1535-ல் மத ஒழுக்கவாதிகளும் (Puritans) தொடர்ந்து அமெரிக்காவில் ஆங்கிளிக்கன் சபையில் பிரிவு உண்டாகி சீடர்கள் சபை (Disciples of Christ) களுமாக பிரிந்தன. கி. பி. 1811-ல் அமெரிக்காவில் விசுவாசி ஞானஸ்னானம் தொடங்கியது. They originated in 1811, as a group with in the Presbyterianism, through they adopted belivers baptism (ibid., p 151)

ஒரு கேள்வி :

புதிய ஏற்பாட்டில் விசுவாசித்து ஞானஸ்னானம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் விசுவாசக் குடும்பம் அமைந்தபின் விசுவாசித்து ஞானஸ்னானம் சொல்லப்பட்டிருக்கிறதா ? யோசி...பதில் சொல்... விடை = இல்லை. விசுவாசித்து ஞானஸ்னானம் என்பது கிறிஸ்தவக் குடும்பம் அமைவதற்கு முன் சொல்லப்பட்டது. பார்க்கிளே என்ற வேதபண்டிதர்,

குழந்தை ஞானஸ்னானம் இருந்தது எனத் தெளிவாகக் கூறுகிறார். "In N. T. times baptism was largely audlt baptism. But it was not that there was anything against infant baptism, but in those early days men and women were coming in from other faiths and the christian family had no time to develop. என்று பார்கிளே என்ற வேத பண்டிதர் கூறுகிறார்.

அப். 9 : 26-ல் எத்தியோப்பிய மந்திரி விசுவாசித்து ஞானஸ்னானம் பெற்றார். இவன் ஒரு proselyte (எத்தியோப்பியன் – யூதனாக மாறியவன்). ஆகவே எருசலேமில் தொழுது கொள்ள போகிறான். இயேசுவை இவனுக்குத் தெரியாது. இயேசுவை முதல் தடவையாக அறிந்து விசுவாசித்து ஞானஸ்னானம் எடுக்கிறான் புறமதத்திலிருந்து வரும்போது, இப்படித்தான் இன்றும் சீர்திருத்த சபை செய்துவருகிறது.

சவுல், எத்தியோப்பிய மந்திரி, சிறைச்சாலைக் காரன் முதலியோர் விசுவாசித்து ஞானஸ்னானம் பெற்றனர். ஆனால் இவர்கள் குழந்தைகளா யிருக்கையில் ஞானஸ்னானம் பெறவில்லை. இவர்கள் புதிய கிறிஸ்தவர்கள். இதுவே அவர்கள் பெற்ற முதல் கிறிஸ்தவ ஞானஸ்னானம். சவுல் யூத ஞானஸ்னானம் பெற்றவன் என அறிக.

விசுவாசக் குடும்பம் :

விசுவாசக் குடும்பம் அமைந்தபின் விசுவாசித்து ஞானஸ்னானம் என புதிய ஏற்பாட்டில் சொல்லப்

படவில்லை. மாறாக குடும்பமாகக் கொடுக்கப்பட்டது. விசுவரசக் குடும்பம் அமைவதற்குமுன் குடும்பமாக ஞானஸ்னானம் கொடுக்கப்படவில்லை. லீதியாளும் அவள் வீட்டாரும் (அப். 16 : 15) ஞானஸ்னானம் பெற்றனர். பவுலின் செய்தியைக் கேட்ட லீதியாள் மற்றும் அவள் வீட்டார் அனைவரும் ஞானஸ்னானம் பெற்றனர். ஸ்தேவான் குடும்பம். சிறைச்சாலைக் காரன் குடும்பம் (16 : 33) கிறிஸ்பு குடும்பம் (18.8) முதலியோருக்கு ஞானஸ்னானம் கொடுக்கப்பட்டது. வீட்டார் என்றால் வீட்டிலுள்ள எல்லாரையும் (வேலைக்காரர் கூட) வயது பேதமின்றி குறிக்கும்.

பெற்றோர் விசுவாசம் பிள்ளைகளுக்குப் போதுமானதா :

போதும். "கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சிறைச்சாலைக் காரனிடம் சொல்கிறார். இங்கு அவர் மனைவி பிள்ளைகள் எப்படி விசுவாசியானார்கள்? ஐயா, அம்மா! "இது கடவுளுடைய அருட்கொடை. இது நம்மால் ஆவது அல்ல,(ரோமர் 16:6) கிருபையினால் கிடைக்கப்பெற்றது. சகேயுவைக் கண்ட கடவுள் அவன் வீட்டாரையும் கண்டார் இன்று இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது என்றார்.

நூற்றுக்கதிபதி வேலைக்காரனுக்கு சுகமில்லை. இந்த வேலைக்காரனுக்கும் இயேசுவுக்கும் தொடர்பு இல்லை. நூற்றுக்கதிபதியின் விசுவாசத்தைப்பார்த்து

அவன் வேலைக்காரனுக்கு சுகம் கொடுத்தார் (மத். 8:5ff). திமிர்வாதக்காரனை சுமந்து கொண்டு வந்தவர்களின் விசுவாசத்தைப் பார்த்து திமிர்வாதக் காரனுக்கு சுகம் கொடுக்கிறார் (5:20). இதுபோலவே பெற்றோர் விசுவாசம் பிள்ளைகளுக்குப் போதுமானது. மேலும் விசுவாச பெற்றோருக்கு பிறக்கும் பிள்ளைகளும் பரிசுத்தமானவர்களே (I கொ. 7:14). வேர் பரிசுத்தமாயிருந்தால் கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும் (ரோ. 11:16).

ஆதி திருச்சபை தந்தையர்களைவிட நாம் திருமறைத் தெளிவு உடையவர்கள் அல்ல, இந்தியாவில் நற்செய்தியைக் கொண்டுவந்ததினால், நாம் அவர்களிடத்தில் திருமறை கற்றோம். அவர்கள் போதித்ததைவிட நாம் சிறந்த போதகர்கள் அல்ல. இருள் சூழ்ந்திருந்த (சதி, குழந்தைகள் விவாகம், மூடநம்பிக்கைகள், அடிமைத்தனம், கல்லாமை) இந்தியாவை ஒளிமயமாக்கி வைத்த, புனித சவேரியார், (14-ம் நூற்றாண்டு) சீகன்பால்கு (1706), ஜாண்-டி-பிரிட்டோ (1675) றிங்கல்தௌபே (1806) போன்றோர் போதித்த உண்மைகள் எங்கே? இவர்கள் குழந்தைகளுக்கு ஞானஸ்னானம் கொடுத்தனரே. இவர்களைவிட நாம் விவேகிகளும், தியாகிகளும். திருமறை தெரிந்தவர்களும் அல்ல என்பதை நினைத்துக்கொள்வோம். இன்று குழந்தை ஞானஸ்னானத்தை எதிர்ப்பவர்கள் - திருமறைப் பின்னணியம் தெரியாதவர்கள் என்பது மிகத்தெளிவு.

மறு ஞானஸ்னானமும் விசுவாசக் குறைவும் :

மறு ஞானஸ்னானம் திருமறைக்கு முரணானது (எபே. 4 : 5). ஞானஸ்னானம் திரும்பத்திரும்ப கொடுப்பதை திருமறை ஆதரிக்கவில்லை. இன்று ஆறு, ஏழுமுறை ஞானஸ்னானம் எடுத்தவர்கள் உண்டு. இவர்கள் திருமறையை விசுவாசித்து அல்ல, சில போதகர்களை திருப்திப்படுத்தவே பல ஞானஸ்னானங்களை எடுத்துள்ளனர்.

ஒருவன் இன்னொரு ஞானஸ்னானம் எடுப்பதால் அவன் விசுவாசக்குறைவைத்தான் காட்டுகிறது எடுத்த ஞானஸ்னானத்தில் சந்தேகமிருந்தால் எதில்தான் உறுதிவரும் ? இவர்கள் இரட்சிப்பில் எப்போதாவது வருவார்களா என்பது சந்தேகத்துக்குரியது. மாத்திரமல்ல கடவுளுடைய கிருபைக்கும் அபாத்திரர்கள்.

“நான் விசுவாசியானேன்” என்ற நமது தகுதியைத் துணிந்து சொல்ல யாருக்கும் தகுதியில்லை. இரட்சிப்பு இத்தகுதியினடிப்படையில் கிடைத்தது அல்ல. தகுதியை நாம் சிந்தித்தோமானால் யார் நிலை நிற்பான் (சங். 130:3). எனவே நான் ஞானஸ்னானத்துக்கு தகுதி பெற்றேன் என்பது பரிசேயத்தனம். இப்படி மறு ஞானஸ்னானம் எடுப்பதினால் சபைகளில் பிரிவினை ஏற்படுகிறது. இதனை கடவுள் விரும்பவில்லை. பவுல் விரும்பவில்லை (I கொரி. 1 : 13).

ஆகவே குழந்தைகளை "தடை" செய்யாது அவர்களுக்கு ஆத்மீக ஆகாரமாகிய ஞானஸ்னானத்தை கொடுத்து, போதித்து வழிநடத்துவோம்.

மரித்தவர்களுக்காக ஞானஸ்னானம்:

இது எப்படி என்று கேட்பாரில்லை. காரணம் ஆதாயமில்லை. I கொரிந்தியர் 15 : 29–ல் மரித்தவர்களுக்காக ஞானஸ்னானம் கொடுத்தனர். எந்த முறையில் யாருக்கு கொடுத்தார்கள் என்றில்லை. இது விவேக மற்ற செயல் என்றும் சொல்லலாம். இது உயிர்த்தெழல் உண்டு என்ற நம்பிக்கையைக் காட்ட, கிறிஸ்தவர்கள் தங்கள் மரித்த சொந்தக்காரர்களுக்காக, நண்பர்களுக்குக்காக – அவர்களும் கிறிஸ்துவின் மீட்பிற்கு பங்காளிகளாக வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் எடுத்தனர். இதைப் பவுல் உயிர்த்தெழுதல் அனுபவத்தோடும், நம்பிக்கையோடும் இணைக்கிறார். காலப்போக்கில் இது நின்றுபோயிற்று.

தண்ணீரில்லா ஞானஸ்னானம்:

I கொரிந்தியர் 10 : 1–2 ஐப் பார்க்கும்போது "இப்படியிருக்க சகோதர சகோதரிகளே எவைகளை அறிய வேண்டுமென்றிருக்கிறேன் என்றால், நம்முடைய பிதாக்கள் எல்லாரும்...மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்னானம் பண்ணப்பட்டார்கள். இங்கு தண்ணீர் உடம்பில் பட்டதா? இல்லை. எப்படி ஞானஸ்னானமாகும்? சிந்தித்துப் பார்! தண்ணீர்படாமலும், மேகநிழலும் ஞானஸ்னானம் தான். இதில் வேறு சில உண்மைகளும்

இருக்கின்றன. (1) சிவந்த சமுத்திரத்தை கடந்தவர்கள் எல்லாரும் விசுவாசிகளா? இல்லை. (2) குழந்தைகள் உண்டா? உண்டு (யாத். 12:37) கிருபையினால் எல்லாரும் மீட்கப்பட்டார்கள். ஆனால் அன்று மூழ்கினவர்கள் மீழவில்லை.

பேதுரு அப்போஸ்தலர் மீட்பை ஞானஸ்னானத்திற்கு ஒப்பிடுகிறார். நோவா நீதிமான்–காப்பாற்றப்பட்டது அவன் குடும்பம் முழுவதும் நோவாவை நகைத்தார்கள், நோவா பேழைக்குள்ளிருந்த நிகழ்வை ஞானஸ்னானத்தோடு ஒப்பிடுகிறார் (I பேது 3:20, 21) தண்ணீர் உடம்பில் பட்டதா? இல்லை. நகைத்தவர்கள் மூழ்கி மாண்டனர்.

மேற்கூறிய இரண்டு நிகழ்வுகளினடிப்படையில் (I கொ. 10:1–2; I பே. 3:20,21) இரட்சண்ணிய சேனை; நண்பர்கள் சங்கம் போன்ற திருச்சபைகள் கொடியை உயர்த்தி அதன் நிழலில் (மேகஸ்தம்ப ஒப்பனை) கைகளை வைத்து ஞானஸ்னானம் கொடுக்கிறார்கள். இது சரியான முறை என்பது எனது நம்பிக்கை. In the 17th century the Society of Friends reject baptism due to schism (Faith and order, 1971, p. 38) some African churches practice baptism of the Holy Spirit without water, through laying on of hands... (BEM Document. p. 7)

ஆகவே சபையைப் பயமுறுத்தி முழுக்கு ஸ்னானம் எடுத்தால்தான் விண்ணரசு என்பது

திருமறைக்கு முரணான போதகம். காரணம் ஞானஸ்னானம் கொடுப்பவரையோ எடுப்பவரையோ தண்ணீரினாலோ, அதன் அளவினாலோ அல்ல, கடவுளுடைய கிருபையினாலேயே எல்லாம் ஆகிறது.

முறைகளும் பிரச்சினைகளும்:

நாம் இப்போது முக்கியமான கட்டத்திற்கு வந்திருக்கிறோம். ஆனால் முக்கியமான கருத்தே அல்ல. கருத்துரைக்குள் போகுமுன் சில கேள்விகளை எழுப்பி விடையும் தருகிறேன்.

(1) தூய யோவான் நற்செய்தியில் (9 : 6) வருகிற கண்தெரியாதிருந்து பார்வையடைந்தவனும், தூய மாற்கு நற்செய்தியில் வருகிற (10 : 52) கண் தெரியாதிருந்து பார்வையடைந்தவனும் நேருக்கு நேர் சந்திக்கிறார்கள் என வைத்துக் கொள்வோம். "உனக்குக் கண்பார்வை எப்படி கிடைத்தது ?" என மாறிமாறிக் கேட்டனர். யோ. 9:6 சொன்னார்–"தரையில் உமிழ்ந்து சேறுண்டாக்கி கண்ணிலே பூசி, சீலோவாம் குளத்தில் கழுவு என்றார். அப்படிச்செய்தேன் கண்பார்வை கிடைத்தது". மாற்கு 10 : 52 சொன்னார் "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்று ஒரு சொல் சொன்னார், உடனே பார்வை கிடைத்தது" யோ. 9:6 சொல்லுவார் எனக்குத்தந்த 'முறைதான்' சரி. உடனே மாற்கு 10:52 சொல்லுவார் இல்லை, இல்லை! ஒரு சொல் மாத்திரம் சொன்னார், பார்வை அடைந்தேன். ஆகவே எனக்குத்தந்த "முறை தான்" சரி இதில் எந்த முறை சரி? உண்மையாதனில்

கொடுத்த முறை வெவ்வேறாக இருக்கலாம். அது முக்கியமல்ல. அடைந்த பார்வை தான் முக்கியம்.

(2) தாகம் தீர-ஒருவன் பொற்பாத்திரத்தில் குடிக்கிறான், ஒருவன் ஸ்டீல் டம்ளரில்; ஒருவன் கண்ணாடி டம்ளரில்; ஒருவன் தேங்காய் சிரட்டையில் குடிக்கிறார்கள். எந்தப் பாத்திரம் என்பது முக்கிய மல்ல; தாகம் தீர்வதுதான் முக்கியம்.

(3) எல்லா ஜனத்திற்கும் சுவிசேஷம் சொல்ல, ஒருவன் விமானத்தில் – ஒருவன் காரில் – ஒருவன் சைக்கிளில்–ஒருவன் நடந்து–செல்கிறார்கள்–இங்கு சென்றவிதம் முக்கியமல்ல. தற்செய்தி அறிவிப்பது தான் முக்கியம். ஆகவே ஞானஸ்னான முறைகள் முக்கியமல்ல; அதன் பொருளோடு, அனுபவத்தோடு வாழ்வது தான் முக்கியம்.

எவ்வாறு குழந்தை ஞானஸ்னானத்திற்கு நேரடியான திருமறைத் தெளிவு இல்லையோ அவ்வாறே மூழ்கி ஸ்னானம் எடுக்க எந்த மறைமுக தெளிவும் கிடையாது. அதே சமயம் தெளித்தல். வார்த்தல் ஸ்னானத்திற்கு தெளிவான ஆதாரங்கள் ஏராளம் உண்டு. எந்த ஒரு முறையும் திருமறையில் சொல்லப்படவில்லை. அன்று அவசியமும் இல்லை. ஆனால் தெளித்தலுக்கு சான்றுகள் உள்ளன— முழுகி எடுத்தலுக்கு ஒரு சான்றுகூட வேதத்தில் இல்லை.

தெளித்தலுக்கு சான்றுகள் :

சுத்த ஜலம் தெளிப்பேன்......சுத்தமாவீர்கள் (எசேக். 36:25) என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறிய

இடம் திருமறையில் இல்லை. ஆனால் 3000 பேர் ஞானஸ்னானம் எடுத்தபோது, (தெளிக்கப்பட்டு) நிறைவேறியிருக்கக்கூடும் என வேத பண்டிதர்கள் எண்ணுகின்றனர். இஸ்ரவேலர் தங்களை சுத்திகரிக்க தங்களைக் கழுவிக் கொண்டனர் (யாத்.30:20) இதுபோல் பாத்திரங்களையும் கழுவுவது வழக்கம். இதுபோல் ஆரோனையும்...ஜலத்தினால் ஸ்னானம் பண்ணுவித்தார்கள் (யாத். 40:12)-இவ் வசனத்திலுள்ள ஸ்னானம் கழுவுதலே. அதாவது ஆங்கில வேதாகமத்தில் "Washed them with water (KJV). கால் கழுவுவதும் (யோவா. 2 : 6; மாற். 7:3) சுத்திகரிப்பில் அடங்கும்.

அபிஷேகம்:

இந்த வார்த்தைகூட முழுமையாக உடம்பைக் கழுவுவது என்றும், தலையில் தைலத்தை வளர்ப்பதும், கிரீடத்தை வைப்பதும் அபிஷேகம் என்றும்தான் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக் கிறது. II இரா. 9 : 3-ல் தைலக்குப்பியை எடுத்து அவன் தலையின் மேல் வார்த்து உன்னை இஸ்ரவேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினேன். இங்கு தைலம் வார்க்கப்பட்டது. ஆனால் இதனை நாம் அபிஷேகம் என்கிறோம். II இரா. 11 : 12-ல் இராஜகுமாரனை வெளியே கொண்டுவந்து கிரீடத்தை அவன்மேல் வைத்து.........அபிஷேகம் பண்ணி...என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே வார்த்தையளவில் புரிந்துகொள்வதை விட அதன் பொருளை உணர்வதே முக்கியம். இங்கு 'அபிஷேகம்'

வார்த்து கொடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. (லேவி. 8 : 30; I சாமு. 10 : 1; 16 : 13; I இரா. 1 : 39; 19 : 16).

திருவசன முழுக்கு :

எபேசியர் 5:26-ல் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் என்று பவுல் கூறுவது கிரேக்க கருத்துப்படி விவாகத்திற்குமுன் மணப் பெண்ணை ஒரு புனித நீராட்டுக்குட்படுத்துவர் (sacred bathing). இந்த வசனத்தை வைத்து முழுகி எடுக்கக்கூறுவர்.முதலில் இது ஞானஸ்னான மல்ல. ஆங்கில திருமறையில் Washing of water by the word என கூறப்படுகிறது. இதனை பவுல் எபேசுவுக்கு திருவசனம் கொண்டு கழுவப்பட வேண்டும் என்று–மணப்பெண்ணின் புனித நீராட்டு தெரிந்த மக்களுக்கு–இப்புதுக் கருத்தைத் தெரிவிக் கிறார். அந்த நீராட்டு மாத்திரம் அல்ல கடவுளின் வார்த்தையால் கழுவப்படவேண்டும் (in Christ idea) என வலியுறுத்துகின்றார். பவுல் தீத்துவுக்கு எழுதும்போது (3:5) மறு ஜன்ம முழுக்கு என்று சொல்வது திருவசன முழுக்காகும். இது கிறிஸ்துவுக்குள் இருக்கும் அனுபவமாகும். இது வசனத்தினாலானதே தவிர கிறிஸ்தவ ஞானஸ் னானமல்ல. சிலுவை கள்ளன் மறுபிறப்படைந்தது வார்த்தையினாலாகிய ஸ்னானத்தினால் தான்.

சிலுவை கள்ளன் ஞானஸ்னானம் பெறாமல் இறையரசை அடைந்தான், இவனுக்கு தருணம்

கிடைக்கவில்லையென்பர். அப்படியெனில் சமாரியப் பெண்ணிடம் நீ போய் ஸ்னானம் எடு என சொல்ல வில்லையே; பெரும்பாடுள்ள ஸ்திரீக்கு தருணம் இருந்ததே; முப்பெத்தெட்டுவருடம் வியாதியா யிருந்தவனிடம் - விடுதலை பெற்றபின் - தருணம் இருந்ததே. இவர்களைப் பார்த்து ஞானஸ்னானம் எடுக்க சொல்லவில்லையே. ஞானஸ்னானம் எடுக்கா விட்டால் நரகம் என சாதிப்பவர்களுக்கு இவைகள் சான்றாகட்டும்.

இயேசு பேதுருவிடம் முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவக்கடவன் (யோ. 13:10) என்று சொன்னது யூத சுத்திகரிப்பே (Daily Purification) தவிர ஞானஸ்னானமல்ல. காரணம் கிறிஸ்தவ ஞானஸ்னானம் இன்னும் உதயமாக வில்லை. It's not yet instituted.

இயேசுவின் அடக்கம் :

ரோமர் 6:1-13-ல் அடங்கிய வசனம் சிலரைத் தவறான வழியில் நடத்துகிறது. இவ்வதிகாரத்தின் பொருளை உணராததே இதற்குக் காரணம், இங்கு கடவுளுக்கு அவயவங்களை ஒப்புக்கொடுத்து பழைய மனிதனை சிலுவையில் அறைந்து அவருடன் உயிர் பெற்றிருக்கிறோம் (புதுமனிதனாயிருக்கிறோம்) என்ற அனுபவத்தை ஒப்புமைப்படுத்துகிறார்.

ரோமர் 6 : 3-ஐ ஞானமாகப் படியுங்கள்- கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்னானம் பெற்ற நாம் அனைவரும் (ஞானஸ்னானம் ஏற்கனவே பெற்றாகி

விட்டது) எனச் சொல்லி ஞானஸ்னானம் பெற்ற மக்களை மரணத்திற்கும் (பழைய மனிதனைக் களைதல்) உயிர்த்தெழுதலுக்கும் (6:5,6) இணைக்கிறார். இது பாவத்துக்கு மரிப்பதும் (இது தண்ணீருக்குள் அல்ல ஜீவ வார்த்தையால்) கடவுளுக்குள் பிழைப்பதும்; சரீர பாவங்களை கடவுளுக்கு ஒப்புக் கொடுப்பதும் (6 : 13) ஆகும் என்பதை உணர்வோம்.

அடக்கம் (6:4) என்ற சொல்லை தவறாகப் புரிந்துகொள்வதே இதற்குக் காரணம். ஒரு பெண் நளதம் என்னும் தைலத்தை தலையில் (காலில்) ஊற்றினாள். இதைக் கடவுள் சொல்கிறார். இவள் இந்தத் தைலத்தை என் சரீரத்தில் ஊற்றினது என்னை அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமான செய்கை (மத். 26:12) என்று. ஆகவே நிகழ்வின் பொருளைத்தான் புரிந்த கொள்ள வேண்டும்.

கரையேறினார் :

இயேசு தண்ணீரிலிருந்து கரையேறினார் (மத். 3:16). முதலில் இது கிறிஸ்தவ ஞானஸ்னானமல்ல. தவிரவும், அவரோடு நம்மை இணைக்கவும் முடியாது என்றாலும் இந்த வசனத்தை சுட்டி முழுகி என்று சொல்வது உசிதமல்ல. கணுக்கால் அளவு தண்ணீரில் இறங்கி ஏறினார் என்றும் சொல்வதற்கு இடமுண்டு.

இயேசு மூழ்கி எடுத்திருக்க முடியாது காரணம் இயேசுவின் காலில் உள்ள பாதரட்சையை அவிழ்க்க தகுதியில்லையென்றவன் எப்படி தலையில் கை

வைத்திருப்பார். ஒருவேளை மூழ்கி எடுத்திருந்தாலும் "மூழ்கி" என்ற முறை முக்கியம் என்றிருந்தால் கட்டாயம் மூழ்கி என்று சொல்லப்பட வேண்டும். (உ.ம்.) நாகமான் மூழ்கினான் (IIஇரா. 5:14) என்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தவிரவும் இயேசுவின் ஞானஸ்னானம் வித்தியாசமான பொருளையுடையது எனக் கூறியுள்ளேன். இயேசு எவ்வளவோ வாழ்க்கைத் தத்துவங்களையும், உயர்ந்த போதனைகளையும் சொல்லியிருக்க, ஞானஸ்னானம் எடுக்கும் முறையா முக்கியம்– பரிதாபம்.

பவுல் ஞானஸ்னானம் பெற்றது அனனியா வீட்டில் (அப். 9:18). சிறைச்சாலைக்காரன் இரவில் இவர்கள் வீட்டிலும், சிறைச்சாலையிலும் எப்படி பெற்றிருப்பார் ?

தெளித்தல் :

இதற்கு அதிக வெளிப்படைச் சான்றுகள் இருந்தாலும் – இது தான் சரி எனச் சொல்ல மாட்டேன். அதாவது சுத்திகரிப்பிற்கு, அபிஷேகத் திற்கு, தண்ணீர் தெளித்தனர். துர்மனசாட்சி நீங்க தெளிக்கப்பட்ட இதயமுள்ளவர்களாயும், சுத்த தண்ணீரால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும்... என்று தெளிவாக தெளித்தலுக்கு சான்றுகள் உண்டு.

சிலுவை மறைக்கப்படும் பரிதாபம் :

ஞானஸ்னானம் போன்ற புனித சடங்கிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து சபைகள்

பிரிவதினால் சிலுவையும், இயேசுவும் அவர்தரும் மீட்பும் மறைக்கப்பட்டு மறக்கப்படுகிறது.சிலுவையை மறைக்கும் எந்த போதகமும் கள்ளப் போதகமே.

இன்று அனேக கிறிஸ்தவர்கள் சபை ஊழியர் களிலும், சில சபைகளிலும் நப்பிக்கை வைத்து மூன்று, நான்கு, ஏழுமுறை ஞானஸ்னானம் எடுத்தவர்கள் உண்டு. எத்தனைமுறை எடுத்தாலும் தண்டனை இல்லை. ஆனால் விசுவாசமின்மைக்கு நிச்சயம் தண்டனையுண்டு (மாற். 16 : 16).

ஒரு கேள்வி :

மூழ்கியெடுப்பது சரியென்று சொல்லுகிறவர் களுக்கு ஒரு கேள்வி. இன்று - இருந்து மூழ்கி எழும்புகின்றனர். மல்லாந்து மூழ்குகிறார்கள் ஒரு முறை மற்றும் மூன்று முறை மூழ்குகிறார்கள். இந்த முறைகளில் எந்த முறை சரி? இதனைச் சரியாக வரையறுக்க முடியாத நாம் ஏன் முறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம்? இரட்சிப்பு கிரியை யினால் (ஞானஸ்னானம்) அல்ல, அது அவருடைய அருட்கொடை. கிறிஸ்துவுக்குள் இருப்பதே முக்கியம். அதற்குவழி இருதய சுத்தம். இருதயத்தில் சுத்த முள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் கடவுளைத் தரிசிப்பார்கள் (மத். 5 : 8).

ஞானஸ்னானம் ஓரத்தில் வைக்கப்பட வேண்டியது :

அறிவர் தியோடர் வில்லியம் கூறும்போது', இன்று அனேகர் வாழ்வின் நடுவில் வைக்கவேண்டிய

கிறிஸ்துவின் தூய வாழ்வு–தியாகம்–மரணம்–உயிர்த்தெழுதல்–இவைகளை ஓரத்திலும், ஓரத்தில் வைக்க வேண்டிய சித்தாந்தங்கள் (ஞானஸ்னானம்) நடுவிலும் வைப்பது மிகத்தவறு. இது சிலுவையை மறைக்கும் போதகம் என்கிறார்.

3000 பேர் ஞானஸ்னானம் :

வட்டமான சதுரம் என்று சொல்லலாம். ஆனால் வரைய முடியாது. இதுபோன்று 3000 பேர் ஞானஸ்னானம் பெற்றனர். ஆனால் நடைமுறையில் எப்படியாகும் என்பதை ஆய்வோம். பகல் 12 மணி நேரம். இதில் காலை, மாலை, இடைவேளை என 4 மணி நேரம் குறைக்கலாம், செய்தி கொடுக்க இரண்டு மணி நேரம் ஆகலாம். மீதி 6 மணி நேரம். இதில் ஒரு நிமிடத்தில் 4 பேருக்கு ஞானஸ்னானம் கொடுத்தால் 1440 பேருக்குக் கொடுக்கலாம். ஒரு நிமிடத்திற்கு 6 பேருக்குக் கொடுத்தால் 2160 பேருக்குக் கொடுக்கலாம். இன்னும் மீதியிருக்கிறதே. ஆகவே எசேக். 36 : 25 இங்கு நிறைவேறியிருக்கும் என வேத பண்டிதர்கள் கருதுகிறார்கள். இதைக் கருத்தில் கொண்டுதான் அன்று தூத்துக்குடியில் ஒரே நாளில் 20,000 மக்களை தண்ணீர் வாரி எறிந்து தண்ணீர் பட்டவர்களின் பெயர்களை எழுத புனித சவேரியார் சொன்னதுபோல் பேதுரு தண்ணீர் தெளித்து ஞானஸ்னானம் கொடுத்தார் என்பதுதான் உண்மை.

மேலும் (1) மூழ்கி எடுக்க வேண்டும் என்றால் யோர்தானுக்குச் செல்லவேண்டும். இது 17 மைல்களுக்கப்பால் உள்ளது. இது சாத்தியமல்ல.

(2) பலர் சேர்ந்து ஞானஸ்னானம் சேர்ந்து கொடுத்தார்கள் என்று வேதம் சொல்லவில்லை (எழுதாத இடத்தில் வாசிக்க முடியாதல்லவா ?) தவிரவும் இயேசுவுக்குப்பின் சீஷர்கள் தான் அதிகாரப் படுத்தப்பட்டனர். அப்போஸ்தலருக்கு சமமாக யாரும் உதயமாகவில்லை என்பது மனதிலிருக்கட்டும். (3) இங்கு செய்தி கேட்க வந்தவர்கள் மாற்று வஸ்திரம் கொண்டு வந்திருக்க முடியாது.
(4) கிதரோன் ஓடை ஒன்று உள்ளது; இதில் மழைக்காலத்தில் மட்டும் தண்ணீர் வரும். சிந்திக்க.

விசுவாசத்தின் ஆழம் :

மாற்கு 16:16–18 வரை ஞானமாக, சிந்தித்து படிக்கவேண்டும். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்னானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவான். இங்கு விசுவாசத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருக்கிறதே தவிர ஞானஸ்னானத்திற்கல்ல. யார் ஆக்கினைக்குட்படுத்தப்படுவான் என்றால் ஞானஸ்னானம் பெறாதவனல்ல விசுவாசியாதவன் (16:16). மேலும் இந்த விசுவாசத்தின் இலக்கணம் (ஆழம்) சொல்லப்பட்டிருக்கிறது. (1) பிசாசுகளை துரத்துவார்கள் (இந்து கிறிஸ்தவத்திலும், மற்ற மதங்களிலும் நடக்கிறது).(2) நவமான பாஷைகளை பேசுவார்கள் (இதன் அடிப்படை I கொரிந்தி. 14 அதிகாரத்தில் உள்ளது) (3) சர்ப்பங்களை எடுப்பார் (எடுப்பாயா ?) (4) விஷம் குடித்தால் சாகமாட்டான் (குடிப்பாயா ?) (5) வியாதி குணமாகும்.

ஏன் இவைகளைக் கூறினேன் என்றால் தண்ணீரின் ஆழத்தையும், ஞானஸ்னானம் எடுக்கும் முறைகளையும், விசுவாச வீட்டு பிள்ளைகளின் விசுவாச ஆழத்தை அளக்கும் நாம், விசுவாச ஆழமாகிய மேற்கூறிய ஐந்து அம்சங்களை ஏன் பின்பற்றவில்லை. சாதாரண அம்சங்களைத் தெரிந்தெடுப்பது சரியானதல்ல.

ஜலத்தினாலும் ஆவியினாலும்:

(யோ. 3 : 5)

யோ. 3:5-ல் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் கடவுளரசில் பிரவேசிக்க மாட்டான் என்ற வசனத்தை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதுவரை கிறிஸ்தவ ஞானஸ்னானம் உதயமாகவில்லை.

இங்கு 3 : 5-ன் பொருள் என்னவென்றால் ஜலத்தினால் மாத்திரமல்ல நீ ஆவியினால் பெற வேண்டும் என்கிறார். நிக்கதேமு யூத ஞானஸ்னானம் பெற்றவன். இவன் சனகரீம் சங்க அங்கத்தினன். ஒருவன் சனகரீம் சங்கத்தில் அங்கம் வகிக்கவேண்டுமானால் (1) முப்பது வயது முடிந்திருக்க வேண்டும் (2) விவாகமாயிருக்க வேண்டும். (3) யூத ஞானஸ்னானம் எடுத்திருத்தலவசியம். இவர் ஒரு போதகரும் கூட, ஆகவே யூத ஞானஸ்னானம் எடுத்த நீ ஆவியிலும் பெறவேண்டும் எனக் கூறுகிறார். இது தான் சரியான பொருள். இதனை 3:8-ஐ படிக்கும் போது ஆவியில் பிறப்பதை வலியுறுத்துகிறாரே தவிர தண்ணீர் ஸ்னானத்தை குறிப்பிடவில்லை.

"The ideas of 5 (3:5) are developed in 6-8, but in those verse there is mention of spirit and not of water. Indeed 8 almost repeats 5 when it speeks of every one is begotten of the spirit, and it does not mention of Water" (Roymond, E. Brown, the Gospel according to John I - XII, New York : 1966, P. 142).

மேலும் "மறுபடியும்" (3:3) என்ற வார்த்தை கிரேக்க மொழியில் பார்த்தால் அதன் உண்மைப் பொருள் புரியும். அனாதன் (Anothen) என்ற மூல வார்த்தைக்கு இரண்டு பொருள்கள் உள்ளன. (1) தீவிர மாற்றம் (2) மேலிருந்து; இங்கு மறுபிறப்பு என்றால் மேலிருந்து பிறப்பதைக் காட்டுகிறது. மேலிருந்து என்றால் கடவுளிடமிருந்து பிறப்பது. The Greek word 'anothen' here translated 'again' can also be rendered 'from above' (Buice Milne, The message of John, Interversity Press : 1993, P. 74, 75).

ஆகவே இங்கு யூத சுத்திகரிப்பை (யூத ஞானஸ்னானம்) எடுத்தால் மட்டும் போதாது, கடவுளில் பிறப்பதுதான் மிக அவசியம் என்பதை இரட்டையழுத்த அணியில் கூறப்படுகிறது என்பதை உணர்க.

முடிவுரை :

ஞானஸ்னானம், திருவிருந்து ஆகிய இரண்டு சாக்கிரமெந்துகள் நம் ஆத்மீக வாழ்வுக்குரிய உணவு.

ஞானஸ்னானம் எடுக்கும் முறைகள் முக்கியமல்ல. ஞானஸ்னானம் எடுத்தேன் என்ற மனதிருப்தியான ஞானஸ்னான வாழ்வுதான் (Baptismal Life) முக்கியம். ஞானஸ்னானம் ஒருநாள் அடையும் நிகழ்வு அல்ல. வாழ்நாள் முழுவதும் அனுபவிக்கும் பாடுகளின் பாதை. (Via Dolorosa) இந்நிகழ்வு கிறிஸ்துவில் தினமும் வளருகின்ற அன்றாடக நிகழ்வு 'Baptism is related not only to momentary experience, but life long growth in Christ (BEM. Document, WCC, 1982, P. 4).

இது திரும்பத்திரும்ப எடுக்கும் நிகழ்ச்சியல்ல. ஆனால் திரும்பத்திரும்ப நினைவுகூர்ந்து அதன் படி நடக்கத் தூண்டும் ஒரு புனித சடங்கு. எனவே ஸ்னானத்திற்கடுத்த உபதேசத்தை ...மறுபடியும் போட்டு (எபிரேயர் 6:2) சபையைப் பிரிக்காதீர்.

பவுல் இதனைத் தெளிவாக, செய்தியை அறியாதவர்களுக்கும், கேட்காதவர்களுக்கும், அறிவிக்க வேண்டுமே தவிர, மற்றவருடைய அஸ்திபாரத்தில் கட்டாதபடிக்கு கிறிஸ்துவின் நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுவோம் (ரோமர் 15:21) என்கிறார். இதனால் பிடித்து வைத்த ஆடுகளைத் திருடுகிறோமே ஒழிய வேறு என்ன. இன்று மலைநாட்டு ஊழியங்கள், வட இந்திய ஊழியங்கள் போன்றவை செய்யலாமே. இதனைச் செய்யாது எளிதில் (பாடுகள் இல்லாத–சிலுவை இல்லாத) ஊழியத்தை மற்றவர்களின் அஸ்திபாரத்தில் போடுவது வேதத்திற்கு எதிரானதல்லவா ? (எபி. 6 : 2).

இரத்தசாட்சி ஜஸ்டின் (கி. பி. 80 – 165) போலிக்கார்ப் (155), நம் கையில் தவழும் திருமறையை வடித்துத்தந்த புனித ஜரோம் (4–ம் நூற்றாண்டு) தொடங்கி, 15-ம் நூற்றாண்டு வரை வாழ்ந்த மக்கள் நரகத்திற்கா போனார்கள் (விசுவாசித்து ஞானஸ்னானம் 16-ம் நூற்றாண்டில் உதயமானது எனப்பார்த்தோம்). யோசித்துப் பாருங்கள் இன்னும் அறியாமை என்னும் தவறை செய்யாதீர்கள்.

ஞானஸ்னானம் அடையாளம் (Symbol). இதன் பின் இருக்கும் வாழ்வுதான் முக்கியம். ஒரு திருமணமான பெண்ணிற்கு தாலி அடையாளம். ஆனால் தாலிக்குப் பின் இருக்கும் கற்புள்ள வாழ்க்கைதான் முக்கியம். பேராயர் A. H. லெக் அவர்கள் தன் நூல்,"Christian baptism-its practice and meaning"-ல் ஞானஸ்னானம் திரும்ப எடுப்பது விசுவாசத்தின் அடையாளமல்ல. அவிசுவாசத் தினாலே தான் இரண்டாவது எடுக்கின்றனர் என்கிறார். இது எதற்கு ஒப்பு என்றால் ஒருவர் திருமணம் செய்யும்போது இல்வாழ்க்கையைக்குறித்த சரியான அறிவு இருப்பதில்லை. பத்து வருடம் இல்லற வாழ்வு நடத்தி திருமணத்தைக் குறித்த நல்ல அறிவு கிடைத்தபின் திரும்பவும் போதகரிடம் சென்று, "ஐயா திருமணத்தின் இரகசியமும், அறிவும் இப்போதுதான் கிடைத்தது. ஆகவே எங்களுக்கு மீண்டும் ஒருமுறைகூட விவாகம் நடத்திவையுங்கள் என்பதைப் போன்றதாகும் என்கிறார்.

ஞானஸ்னானம் என்ற திருச்செயல் கிறிஸ்துவுக்குள் அனுபவிக்கும் செயல். கிறிஸ்துவை அணிகிற (கலா.3:27)பாடு-மரண-உயிர்த்தெழுதலில் பங்கு பெறுகிற (ரோ. 6 : 6ff; கொலோ. 2 : 12; I பேதுரு 3 : 2) செயலாகும்.

இது ஒற்றுமையின் சின்னம் (It's a Symbol of Unity) (எபே. 4 : 4-6). ஞானஸ்னானத்தின் மூலம் உலக கிறிஸ்தவர்கள் என்ற ஒற்றுமையின் சின்னத்தை உணரவேண்டும். தற்போது பிரிவினையின் காரணியாகிவிட்டது.ஒவ்வொரு திருச்சபைகளும் ஒன்றுக்கொன்று ஞானஸ்னானத்தை ஏற்றுக்கொண்டால் (Mutually to recognize) நாம் அதிக வலிமையடைவோம்.கிறிஸ்துவினிமித்தம் நாம் பிரியோம்.

எனவே வாதங்களையும், பேதங்களையும் தவிர்த்து புதிய பாதையைப் படைப்போம். எல்லா திருச்சபைகளுடைய ஞானஸ்னான முறைகளையும் ஒன்றுக்கொன்று ஏற்போம். இதுவே திருச்சபைகளின் துரித கூட்டுமுயற்சி (Urgent Ecumenical task) யாக அமையட்டும்.

துணை நின்ற நூல்கள்

1 Barcla — Commendary
2 BEM — Document, WCC: Geneva, 1982
3 Dravie — The Early Christian Church, Machigen: Baker Book House, 1980
4 Esubius — Ecclesiastical History - Vol.-I New York: SPCK, 1927
5 Garret — Christian Worship
6 Gibbs — Jerusalem to New Delhi
7 Legg, A.H. — Infant Baptism
8 John Foster — Church History First Advance A. D. 50—500 1976
9 John — Baptism and Conversion
10 Jurgens — The Faith of the Early Church Vol. I Bangalore: TPI 1984
11 Jurgens — Vol. II (Both are PrimarySources)
12 Kelly JND — Early Christian Doctrines, London: A & C Black, 1985
13 Manuel A.D. — Baptism
14 Roymound E. Brown — The Gospel acc. to John I-XII New York 1966
15 Thompson — New Movements, Church History III 1976
16 Wootton — Christian Worship, Madras: CLS, 1977
17 Alex — M.Th. Pappers
18 Jarome — Bibilical Commendary (II Vols)
19 Faith and order — 1971

(N.B.) இந்நூலில் மொழிதிருத்தம் செய்யப்படவில்லை.

வரவேற்புப் பா

உன்னதத்தில் வீற்றிருக்கும் வல்லபரனின் திருநாமத்திலும்
கன்னியின் மைந்தனாம் கர்த்தர் இயேசு திருநாமத்திலும்
மென்மையாய் அசைவாடும் தூயாவியின் திருநாமத்திலும்
தென்னிந்திய தமிழ்சபை அபுதாபியின் சார்பிலும்
அன்புடன் அனைவரையும் அகமகிழ்ந்து
வரவேற்கின்றேன்

கருவின் திருஉருவாம் அருள்நாதர் இயேசுவிற்கு
அருள் கூர்ந்து அளிக்கின்றேன் அனந்தகோடி
ஸ்தோத்திரங்கள்

- அபுதாபி எமிரேட்டில் அருள்பணி தொடர்ந்திடவே
புதிதாகப் பொறுப்பேற்கும் அருட்திரு தாவீது
ஐயரே ! (Rev. David Iyyah)
துதிபாடி கதி தேடி நித்தம்தூய பணி செய்திடவே
அதிகாலை வெள்ளியாம் ஆதிஅந்தம் இல்லா வல்ல
அதிசய நாதராம் இயேசுவின் திருநாமத்தில்
வாழ்த்தியுமை அழைக்கின்றோம் வருக வருகவென்று

- ஆத்தும பாரமதை பெரும்பணியாய் ஆற்றிடவே
காத்திருந்து கர்த்தரின் தூயாவிபெற்று நாளும்
தோத்திர கீதம்பாடி பரமனின் கரைசேர்க்க
ஏத்துகிறோம் உமை ! வாழ்த்துகிறோம் உம்பணி
சிறக்க !!

- அக்கரைச் சீமையாம் இந்த யூ ஏ இ மண்டலத்தில்
கர்த்தரைப் பறைசாற்றி கருவறையாம் நம்
திருமறையின்
சத்தியத்தைத் தெளிவாக்கி நித்தியத்தில் பங்கேற்க
பக்தரை உருவாக்கும் பரமனின் பொற்பணியில்-
சி. எஸ். ஐ.
முத்திரைப் பதிக்கவே முழங்காலின் பலத்துடனே-
தேவ
சித்தத்தை நிறைவேற்ற, திருக்குருசை தோளேந்த
கர்த்தரின் நாமத்தில் சபைமக்கள்யாம் வாழ்த்தி யுமை

வரவேற்கின்றோம் வாழ்க உம் திருப்பணி!
வளர்க உம் அருட்பணி !!

ஆக்கியோன் : ஃபிராங்க்லின், அபுதாபி

இவண்
C. S. I. தமிழ் திருச்சபை
அபுதாபி

(N. B.: Sept. 4, 1998 அபுதாபியில் வாசிக்கப்பட்டது.)

About the Author...



The Pastors are called to equip the congregation by the word of God in the power of Holy Spirit. Today in this modern world every Christian needs to be spiritually nurished by the word of God. To equip the congregation, theological books are very essential. We are called to enlighten our fellow christians, so that they may come to know the christian doctrine more and more.

In this book "Baptisms" the author Rev.V.David aptly brings out the meaning of the word "Sacraments", with special reference to Baptism, and to the great commission of our Lord Jesus Christ. The author shows us what the Bible says about the sacrament of Baptism and its real meaning.

The Author Rev.V. David, who is from the Church of South India, Kanyakumari Diocese is a well-known preacher and an experienced Presbyter. Currently he is the Additional Vicar of C.S.I. Tamil Parish Dubai, based at Abu Dhabi, United Arab Emirates.

Rev. W. Samuel, **M.A., B.D., Dip. C.O., Dip. I.M. (UK)**
Vicar, and Chairman
C.S.I. Tamil Parish, (Dubai, Fujairah,
Ras Al khaimah, Abu Dhabi-
Sharjah and Alain (UAE)

C.S.I. PRINTING PRESS
Martandam, South India, Pin - 629 165.
Phone : 71329